திருவெண்காட்டுத் தலவரலாறு

3/209

ஆக்கியோன்

பேராசிரியர் **த. அகரமுதல்வன்** எம். ஏ., எம். ஃபில்
பூம்புகார் பேரவைக் கல்லூரி

அருள்மிகு சுவேதாரண்யேசுவரசுவாமி
திருக்கோயில் வெளியீடு
திருவெண்காடு-609 114

உ

சிவமயம்

திருவெண்காட்டுத் தலவரலாறு

ஆசிரியர்

பேராசிரியர் த. அகரமுதல்வன் எம். ஏ., எம். ஃபில்.,

பூம்புகார்க் கல்லூரி, மேலையூர்.

வெளியிட்டோர்:

திரு. வ. சிவராஜ் B.A.,

அறங்காவலர் குழுத் தலைவர்

அருள்மிகு

சுவேதாரண்யேசுவரசுவாமி

திருக்கோயில்,

திருவெண்காடு—சீர்காழி வட்டம். 609 114.

எட்டாம் பதிப்பு : 1989

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 5—00

குருகுலம்–வேதாரண்யம்–போன்: 227

முகவுரை

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைச் சிறப்பும் உடையது திருவெண்காடு. ஆதிசிதம்பரம் என்றழைக்கப் பெறும் இவ்வூர் வான்மீகி இராமாயணத்தில் இடம் பெறும் தொன்மைச் சிறப்புடையது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிய பெருமை இத்-தலத்திற்கு உண்டு. காசிக்கு இணையான ஆறுதலங்-களுள் இதுவும் ஒன்று. இத்தலத்திற்கு வந்து முக்குள நீராடிய அச்சுதகளப்பாளருக்கு சித்தாந்த சாத்திரம்வகுத்த மெய்கண்டார் மகவாய்த் தோன்றினார். திருவெண்காட்டு நங்கையும் இவ்வூரில் பிறந்தவரே. அவர் கணவர் சிறுத்-தொண்ட நாயனாரும் இளமையில் இவ்வூரில் வாழ்ந்-தவரே.திருவெண்காடர் எனும் பட்டினத்தடிகள் இத்தலத் தில் சிவ தீட்சை பெற்றார். சைவ-எல்லப்ப நாவலர் எனும் பெரும் புலவர் இத்தலபுராணத்தைப்பாடி உள்ளார்.

இத்தகைய சிறப்பமைந்த இத்திருத்தலத்திற்கு திரு.மு. ஆறுமுகதேசிகர் அவர்களால் தலவரலாறுஎழுதப் பெற்று முதல் நான்கு பதிப்புகளாக வெளிவந்தது. பின்-னர் திரு. ஜி. கல்யாணம்பிள்ளை, எம். ஏ., அவர்களால் எழுதப் பெற்ற தலவரலாறு 5, 6 ம் பதிப்புகளாக வெளி-வந்தது. பேராசிரியர் த. அகரமுதல்வன் எம். ஏ. எம்ஃபில் அவர்களால் எழுதப் பெற்ற இத்தலவரலாறு ஏழாம் பதிப்பாக வெளிவந்தது. இப்போது இந்நூலை எட்டாம் பதிப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அச்சுப் பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக இத்தலவரலாறு சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளது. எனி-னும் பல புதிய செய்திகள் இந்நூலுள் சேர்க்கப் பெற்றுள் ளன. அழகிய தமிழில் தெளிவான நடையில் எழுதப் பெற்றுள்ள இந்நூலை மெய்யன்பர்கள் படித்துப் பயன்பெறுவர் என நம்புகிறோம். இந்நூலை வெளி-யிடுவதற்கு அனுமதி அளித்த துணை ஆணையர் அவர்-களுக்கும் இவ்வாலய அறங்காவலர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். சுந்தரராஜ், பி. எஸ்சி.,
செயல் அலுவலர்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தல இருப்பிடம்	...	1
2.	வெண்காட்டின் வேறு பெயர்கள்	...	2
3.	தலப் பெருமைகள்	...	3
4.	திருக்கோயில் அமைப்பு	...	5
5.	மூர்த்திகள்	...	8
6.	தீர்த்தங்கள்	...	13
7.	தலவிருட்சங்கள்	...	15
8.	வழிபாடு செய்தவர்கள் வரலாறு	...	16
9.	தலத்தைப் பாடியோர்	...	21
10.	செவிவழிச் செய்திகள்	...	25
11.	நித்ய பூசைகளும் திருவிழாக்களும்	...	27
12.	நிர்வாகமும் திருப்பணிகளும்	...	30
13.	கல்வெட்டுச் செய்திகள்	...	32
14.	புதிய திட்டங்கள்	...	34
15.	தலப் பாடல்கள்	...	35

ஸ்ரீ அகோர மூர்த்தி

உ

சிவமயம்

திருவெண்காட்டுத் தல வரலாறு

1. தல இருப்பிடம்

திருவெண்காடு என்னும் திருத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சீர்காழி வட்டத்தில் உள்ளது. சீர்காழியிலிருந்தும், மயிலாடுதுறையிலிருந்தும் இவ் வூருக்கு வந்துசெல்லப் பேருந்து வசதிகள் உள்ளன. சோழவளநாட்டில் காவிரிக்கு வடகரையில் அமைந்த தலங்களுள் பதினோராவதாக வைத்து எண்ணப்படும் தலம் இது. திருவெண்காட்டிற்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் காவிரியாரும், வட எல்லையாக மணி கர்ணிகை ஆறும், கிழக்கே 3 கி.மீ. தொலைவில் அலை கடலும் அணிசெய்கின்றன.

திருவெண்காட்டைச் சுற்றிலும் சைவ, வைணவத் தலங்கள் நிறைந்துள்ளன. திருவெண்காட்டிற்குத் தென் கிழக்கேஉள்ள பூம்புகாரில் திருச்சாய்க்காடும் பல்லவனீச் சுவரமும் உள்ளன. தெற்கேதிருவலம்புரம் உள்ளது. தென் மேற்கில் தலைச்செங்கானமும் ஆக்கூர்தான்தோன்றீச் சுவரமும், திருக்கடவூரும் உள்ளன. தென்மேற்கே புஞ்சை நனிபள்ளியும் செம்பொன்பள்ளியும் உள்ளன. மேற்கே பார்த்தன்பள்ளியும் கீழைத்திருக்காட்டுப்பள்ளியும் வேளூரும் உள்ளன. வடமேற்கில் திருநாங்கூரும் சீர்காழி யும் உள்ளன. வடக்கே திருநகரியும், திருகருக்காவூரும்,

உள்ளன. வடகிழக்கில் திருக்குறையலூரும், திருக்கலிக் காமூரும் உள்ளன. எனவே இத்தலத்திற்கு வருவோர் இங்குத் தங்கியிருந்து பலதலங்களையும் வழிபட வாய்ப்புண்டு.

2. வெண்காட்டின் வேறு பெயர்கள்

திருமுறைகளிலும் கல்வெட்டுகளிலும் அரசு ஆவணங்களிலும் வழக்கிலும் திருவெண்காடு என்றபெயரே உள்ளது வடமொழி, சுவேதாரண்யம் (சுவேதம் = வெண்மை ஆரண்யம் = காடு) என வழங்குகிறது. தில்லையில் ஆடுவதற்கு முன் ஆடல்வல்லான் திருவெண்காட்டில் ஆடியதால் இதனை ஆதிசிதம்பரம் என்று அழைப்பர். சங்காரத்தின்பிறகு உலகம்உய்யச்சிவபெருமான் தொடங்கியஞானதாண்டவம்மறுஊழிவரை இங்குத்தொடர்வதால் இதனைப் பேரரங்கம், மகாவரங்கம் என்று இசைப்பர். நவநிருத்தங்களைச்சிவபெருமான் இங்குச்செய்தமையால் இதனை நவநிருத்தகணம் என்றும் சொல்வர். வேதங்கள் பூசித்தமையால் இது வேதவெண்காடாயிற்று; சுவேதன் என்னும்மன்னன் வழிபட்டதால்இதுசுவேதவனமாயிற்று. காலன் வலியழித்துக் காலாஞ்சரமாயிற்று; தலவிருட்சங்களில் ஒன்று வில்வமாதலின் வில்வவனமென்றும் விளம்புவர். தமோகுணத்தை ஒழிப்பதால் 'தமோநாசபுரம்' என்றும் பாபங்களை அழிப்பதால் பாபநாசபுரம் என்றும், பரவுவர். கணபதி வழிபட்டதால் கணபதிநகரம் என்றும் முருகன் வணங்கியதால் முருகன்பூண்டி என்றும், திருமால் வழிபட்டதால் மாலூர் என்றும், உமை வழிபட்டதால் உமையூர் என்றும், திருமகள் வழிபட்டதால் திருவூர் என்றும் சிறப்புப் பெயர்களை இவ்வூர் பெற்றது. பிரமனுக்கு இவ்வூர் மயானமானதால் பெரியமயானம், ஞானவனம் என்றும் பெயர் பெற்றது. தலங்களுள் இது நாயகமாகத் திகழ்வதால்தலநாயகம்என்றும்,இத்தலத்தில் செய்யும் ஒரு தர்மம் கோடிக்கு இணையாவதால் தரும

கோடி என்றும் சித்திகளை அருளுவதால் சித்திநகர் என்றும் போற்றுவர். தலபுராணப்பாடல் மேலும் பாதாள கைலாயம், சிவானந்தக்காடு, முக்திநகர், முக்திவாயில் ஆகிய பெயர்களையும் வழங்குகிறது.

இப்பெயர்களைத் தொகுத்தளிக்கும் தலபுராணப்பாடல்:

> *"முத்திநகர் தமோநாசபுரம் பாபநாசபுரம் முருகன்பூண்டி*
> *சித்திநகர்பாதாள கயிலாயம்ஞானவனம் சிவானத்தக்கா*
> *டொத்தகணபதி நகரமாதி சிதம்பரந்திருவுமையூர்மாவூரர்*
> *மெய்த்தலநா யகம் பெரியமயான மெனும் பேருடனும்*
> *விளங்கிற்றன்றே"*

5. தலப் பெருமைகள்

1. வான்மீகி இராமாயணத்தில் இத்தலம் குறிப்பிடப் பெற்றுள்ளது. "சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில் எமனை சுவேதாரண்யேசுவரர் எவ்வாறு சம்ஹாரம் செய்தாரோ அவ்வாறு கரதூஷனாதிகளை இராமன் சம்ஹாரம் செய்தான்" என்று வான்மீகி குறிப்பிட்டுள்ளார். இத்தலத்தின் தொன்மைக்கு இக்குறிப்புமேலான சான்றாகத்திகழ்கிறது. "சப பாத கரோ பூமன் தஹ்யமான சராக்னி நருத்ரேநேவ வினிர்தக்த சுவேதாரண்யே யதாந்தகஹா! (ஆரண்ய காண்டம்)

2. காசிக்குச்சமமானதாகத் திகழும் ஆறு தலங்களுள் திருவெண்காடும் ஒன்று. (பிற தலங்கள் திருவையாறு, திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம் ஆகியனவாகும்.)

3. இங்குள்ள சிவ மூர்த்திகள் மூன்று; (சுவேதாரண் யேசுவரர், நடராசர், அகோரமூர்த்தி.) தீர்த்தங்கள் மூன்று; (அக்கினி, சூரிய, சந்திர தீர்த்தங்கள்) தலவிருட்சங்கள் மூன்று; (ஆல், கொன்றை, வில்வம்.)

4. சமயக்குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற சிறப்பு இத்தலத்திற்குண்டு.

5. இது புதன் தலம். இங்குப் புதனுக்குத் தனி ஆலயம் உள்ளது.

6. ஐம்பத்தோறு சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்று. "காளி காலஞ் சரேததா" என்று பாத்ம புராணம் இதனைக் குறிக்கிறது.

7. பிரம்ம சமாதி இங்குள்ளது. இவ்வூர் சங்கல்பத்தில் "பிர்ம ஸ்மசானம்" என்று சொல்லப்படுகிறது.

8. சிவபெருமானின் 64 மூர்த்தி பேதங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ அகோராஸ்திர மூர்த்தியை இங்கு மட்டுமே காணலாம்.

9. ஆதிசிதம்பரம் இதுவே. இங்கும் சபையும், சபையின் தென்மேற்கில் பெருமாள் சந்நிதியும் உள்ளன. சிவபெருமான் இங்கு ஆனந்த தாண்டவம், காளீ நிருத்தம் கௌரீ தாண்டவம்,முனி நிருத்தம் ஸந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம்,புஜங்க லலிதம்,ஸம்ஹார தாண்டவம், பைஷாடனம் ஆகிய ஒன்பது தாண்டவங்களை ஆடியுள்ளார். சிதம்பரத்தில் நிற்குணமாக ஆடி முக்தியைத் தருகிறார். திருவெண்காட்டில் சகுணமாக ஆடி இருமைப் பயனும் தருகிறார்.

10. இந்திரன், ஐராவதம், சிவப்பிரியர், வேதராசி, சுவேதகேது, சுவேதன், விஷ்ணு, சூரியன், சந்திரன், அக்னி முதலியவர்கள் இங்கு வழிபட்டுள்ளனர்.

11. பதினோராந்திருமுறை பாடிய திருவெண்காடராகிய பட்டினத்தடிகள் சிவதீட்சை பெற்ற தலம் இதுவே.

12. பன்னிரு சூத்திரங்களைக் கொண்ட சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்த முழுமுதல் நூலை அருளிச் செய்த மெய்கண்டார் அவதரித்த தலம் இதுவே.

13. சிறுத்தொண்டர் இளமையில் வாழ்ந்ததும், அவர் தம் மனைவி திருவெண்காட்டு நங்கையும், சந்தனத் தாதியும் பிறந்ததுவும் இத்தலமே.

14. ஸ்ரீ சதாசிவப் பிரமேந்திராளின் ஆசிரியரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சார்ய சுவாமிகளின் பரம்பரையில் வந்தவருமாகிய ஸ்ரீ பரமசிவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சமாதி இவ்வூரிலுள்ள மணிகர்ணிகை கட்டத்தில் உள்ளது. இத்தல புராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் தகராகாச வித்தையைப் பற்றி "தகரவித்யா பிரகாசிகை" என்னும் நூலை சுவாமிகள் எழுதியுள்ளார்.

15. திருவாவடுதுறை ஆதீன எட்டாவது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்கள் இவ்வூரின் மேலவீதியில் மேல்திசையில் சமாதி ஆகி உள்ளார்.

16. சோழர் காலத்தில் செம்பு, ஐம்பொன் வார்ப்பு விக்ரகங்களை உருவாக்கும் தொழிற் கூடமாகத் திரு-வெண்காடு திகழ்ந்திருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கிருந்து பிற ஊர்களுக்குச் சிலைகள் செய்து தரப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் உள்ள வார்ப்புச் சிலைகள் மிக நேர்த்தியானவை, திருவெண்காட்டில் இருமுறை தோண்டி எடுக்கப்பட்ட சிலைகள் ஆய்வாளர்களின் பாராட்டைப் பெற்று சென்னையிலும் தஞ்சையிலும் உள்ள கலைக் கூடங்களில் சிறப்பாகத் திகழ்கின்றன.

4. திருக்கோயில் அமைப்பு

திருக்கோயில் ஊருக்கு நடுவில் அமைந்துள்ளது. கோயில் திருமதிலைச் சுற்றி மடவளாகமும், அதனைச் சுற்றி நான்கு அகன்ற திருவீதிகளும் அமைந்துள்ளன.

கிழக்கு நோக்கிய கோயில் எனினும் மேற்கிலும்திருவாயில் உண்டு. கோயில் கிழக்கு மேற்கில் 792 அடி நீளமும் தெற்கு வடக்கில் 310 அடி அகலமும் உள்ளது. கீழ் மேல் வாயிலில் இராஜகோபுரங்கள் உள்ளன. வெளிப்பிரகாரத்திலிருந்து உட்பிரகாரம் செல்லும் கிழக்கு மேற்கு வாயில்களிலும் இரண்டு கூட கோபுரங்கள் உள்ளன.

கீழக்கோபுர வழியே உள்ளே சென்றதும் கொடி மரத்துப் பிள்ளையார், பலிபீடம், கொடிமரம், நந்தி ஆகியவைகளைத் தரிசிக்கலாம். அந்த இடத்திற்குத் தெற்கே அக்கினி தீர்த்தமும், அதன் கிழக்கே அக்கினீசுவரன் கோயிலும் உள்ளன. அக்கினி தீர்த்தக் கரையில் ஊஞ்சல் மண்டபமும் மெய்கண்டார் கோயிலும் உள்ளன. தெற்குப் பிரகாரம் வழியே செல்கையில் சூரியன் கோயிலையும் சூரிய தீர்த்தத்தையும் காணலாம். வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கில் திருக்கோயில் அலுவலகம், களஞ்சியம், நந்தவனம் ஆகியன உள்ளன. மேற்கு வெளிப்பிரகாரத்தில், மேற்கு இராஜகோபுரத்திற்கு வடபால் ஆறுமுகப் பெருமான் கோயிலும், நூற்றுக்கால் மண்டபமும் இணைந்துள்ளன. முருகன் கோயிலுக்கு மேற்கே வீரபாண்டியன் என்னும் சிவலிங்கம் உள்ளது.

வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கிய அம்பாள் சன்னிதி சிறு கோபுரத்துடன் உள்ளது. அம்பாள் கோயிலும் முன் மண்டபமும் முழுதும் கருங்கல் திருப்பணி. அம்பாள் கோயில் மண்டபத்தின் இடப்பகுதியில் புதனுக்குத் தனி கோயில் உள்ளது. அதற்கு இடப்பகுதியில் பிரம்ம சமாதியும் வில்வ விருட்சமும் உள்ளன. அம்பாள் சன்னிதிக்கு எதிரில் சந்திர தீர்த்தமும், அதன் கீழ்க்கரையில் மாம்பெரும் வடவாலவிருட்சமும் சந்திரன் கோயிலும் உள்ளன. வடக்குப் பிரகாரத்தின் வழியே வரும்போது சந்திர தீர்த்தக் கரையில் கொன்றை விருட்சத்தையும் காணுகிறோம். கோயிலின் வடகிழக்கில் அரசும் வேம்பும்

இணைந்துள்ள மேடை உள்ளது. அம்பாள் கோயிலுக்கு மேற்கே சம்பந்த விநாயகர் கோயில் உள்ளது. யாக சாலையையும் அங்குக் காணலாம்.

மீண்டும் கிழக்குப்பிரகாரம் வந்து கொடிமரத்தை அடைகிற போது, வடக்கே அலங்கார மண்டபத்தையும், வாகன மண்டபத்தையும் காணுகிறோம். கிழக்குக் கூட கோபுரத்தை ஒட்டி அழகிய கல்யாணமண்டபமும் அமைந்துள்ளது. அதன் வழியாகத் திருக்கோயிலின் உள்ளே நுழைகிறோம். கல்யாண மண்டபத்தில் நடராசரின் பல்வேறு ஆடல்களைச் சித்திரமாக எழுதியுள்ளனர்.

உட்பிரகாரத்தின் தென்பகுதியில் பெரியவராணப் பிள்ளையாருக்கும், சோமாஸ்கந்தருக்கும் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. தென் திருமாளிகைப்பததியில் அறுபத்துமூவர், பத்திரகாளி, வீரபத்திரர், இடும்பன், சுகாசனமூர்த்தி, சோலையப்ப முதலியார், மந்திரி ஆகிய மூர்த்திகள் உள்ளன. மேற்குத் திருமாளிகைப் பத்தியில் நாகேசுவரர், விநாயகர், யோகமாணிக்கவாசகர், நால்வர், ஆவுடையார் பத்ரபீடம், விசுவேசுவரர், விசாலாட்சி, அங்காளபரமேஸ்வரி, சுவேதவனபெருமாள், பஞ்சலிங்கம், பாலசுப்ரமணியர், அஷ்டலெட்சுமி, மகாலெட்சுமி, சரஸ்வதி, தனிவிநாயகர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

மேற்கு உட்பிரகாரத்தில் தெற்கு நோக்கிய நடராச சபை உள்ளது. வடக்கு உட்பிரகாரத்தில் அகோரமூர்த்தி மூலவருக்கும் உற்சவருக்கும் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. காட்சிநாயனார், சண்டேசுவரர், சுவேதலிங்கம் ஆகியோர் சந்நிதிகளும் உள்ளன. கிழக்கு உட்பிரகாரத்தில் பைரவர், காசிதுண்டி விநாயகர், துர்க்கை நவக்கிரகங்கள் ஆகியோர் உள்ளனர்.

நடுவில் சுவேதாரண்யேசுவரர் கோயில் உள்ளது. நிருத்த மண்டபம், மகாமண்டபம் அர்த்தமண்டபங்களு -டன்கூடிய பெரிய சன்னிதி இது. இதன்வாயிலில் துவார பாலகர்களும் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, இலிங் கோத்பவர், பிர்ம்மா ஆகியோர் உள்ளனர். தெற்கு கோஷ் -டத்தில் சட்டை நாதர் சுதை வடிவிலும் ஐராவதமும் சிவப்பிரியரும்புடைப்புச் சிற்பமாகவும் உள்ளனர். மூலஸ் தானத்தில் திருவெண்காடர் மகாலிங்க மூர்த்தமாக எழுந் தருளியுள்ளார்.

5. மூர்த்திகள்

சுவேதாரண்யேசுவரர்:

திருவெண்காடர், திருவெண்காடு தேவர், திருவெண் காடுடையார், திருவெண்காடுடைய நாயனார், திருவெண் காட்டுப்பெருமான் ஆகிய பெயர்களும் இவருக்கு உண்டு. இவரே இத்தலத்தின் நாயகர். இலிங்க வடிவில் சுயம்பு மூர்த்தமாக இவர் எழுந்தருளியுள்ளார்.

பிரம்மவித்தியாம்பிகை:

திருவெண்காடரின் சக்தியாகப் பிரம்மவித்தியாம் -பாள் என்கிற பெரியநாயகி எழுந்தருளியுள்ளார். மாதங்கி,திருவெண் காடுதேவர்,நம்பிராட்டி,வேயனதோளி -நாச்சியார் என்ற பெயர்களும் இவருக்குண்டு. திருநாங் கூரிலுள்ள மதங்காஸ்ரமத்தில் மதங்க முனிவருக்கு மகளாகத் தோன்றி மாதங்கி என்ற பெயருடன் திருவெண் காடரை நோக்கித் தவமிருந்து, அவரைத்தம் கணவராகப் பெற்றார் என்று பாத்மபுராணம் கூறும். பிரம்மனுக்கு வித்தையைக் கற்பித்ததால் பிரம்ம-வித்தியாம்பிகையா னாள்.

நான்கு கரங்களுடைய நாயகி இவர். இடது மேற் கரத்தில் 'தனந்தரும்,' தாமரைப் பூவும், வலது மேற்கரத் தில் 'கல்வி தரும்' அக்கமாலையும் வைத்துள்ளார். வலது

கோயிலின் தோற்றம்

கீழ்கரம் 'தளர்வறியா மனந்தரும்' அபயக்கரமாகவும், திருவடிகளைக் காட்டும் இடது கீழ்கரம் தம் திருவடிகளைத் தொழுது சேர்ந்தவர் தெய்வவடிவு பெறுமாறும் அருளுகிறது.

நடராஜர்:

இங்குள்ள நடராசரை 'ஆட வல்லான்' என்று அழகாகக் கல்வெட்டு அழைக்கிறது. இது ஆதிசிதம்பரமாதலின் இங்கும் தில்லைச் சிதம்பரம் போன்றே நடராச சபை அமைந்துள்ளது. ஸ்படிகலிங்கமும் இரகசியமும் இங்கும் உள்ளன. அன்றாடம் ஸ்படிக லிங்கத்திற்கு நான்கு அபிஷேகங்களும், நடராசப் பெருமானுக்கு ஆண்டுக்கு ஆறு அபிஷேகங்களும், பஞ்சகிருத்திய பூசைகளும் நடைபெறுகின்றன.

ஆடவல்லானின் அழகிய திருமேனி உணர்த்தும் தத்துவங்கள் பல. இவர் காலில் 14 புவனங்களைக் குறிக்கும் 14 சதங்கைகளையுடைய காப்பு அமைந்துள்ளது' பிரணவம் முதல் நம: இறுதியாகவுள்ள 81 பதமந்திரங்களை உணர்த்தும் 81 சங்கிலி வளையங்கள் கோத்த அரைஞாண் இடுப்பில் திகழுகிறது. முடிந்த 28 யுகங்களைக்குறிக்கும் 28 எலும்பு மணிகள் கட்டிய ஆரத்தையும் இவர் அணிந்துள்ளார். முடியில் மயிற்பீலியும் (பிஞ்ஞகம்) மீன்வடிவில் கங்கையும் இளம் பிறையும் ஊமத்தம்பூவும் வெள்ளெருக்கும் சூடியுள்ளார். 16 கலைகளை உணர்த்தும் 16 சடைகளுள், 15 தொங்க, ஒருசடை கட்டப் பெற்றுள்ளது. தோளில் துண்டும், இடையில் புலித்தோலும் அணிந்துள்ளார். பிற நடராசமூர்த்தங்களைப்போல உடுக்கையும், தீப்பிழம்பும் ஏந்தியுள்ளார். திருவடிவைக் காட்டும் கரத்திலிருந்து விழும் நீர்திருவடியில் நேரே விழுமாறு திருவுருவம் அமைந்துள்ளது.

அகோரமூர்த்தி

இத்தலத்தின் தனிச்சிறப்புக்குரியவர் அகோரசிவன். இவர் மருத்துவாசுரனை அடக்குதற்கு சிவபெருமானின் அகோரமுகத்தினின்று தோன்றியவர். பிரமனிடம் பெற்ற வரத்தால் மருத்துவன் என்னும் அசுரன் தேவர்களுக்குத் துன்பம் விளைத்தான். சிவபெருமான் அருளியபடி தேவர்கள் வெண்காட்டில் வேற்றுருவில் வாழ்ந்து வந்தனர். அசுரன் வெண்காட்டிற்கும் வந்து போர் செய்ய, வெண்காட்டீசர் இடபதேவரை ஏவினார். அசுரன் இடபதேவரிடம் தோற்றுப்பின் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து, சூலாயுதத்தை வேண்டிப் பெற்று மீண்டும் போருக்கு வந்து இடபதேவரை சூலத்தால் தாக்கிக் காயங்களை ஏற்படுத்தினார். இடபதேவர் திருவெண்காடரிடம் முறையிட, அவர் கோபம் கொண்டார். அப்போது அவருடைய ஐந்து முகங்களில் ஒன்றாகிய அகோரமுகத்தினின்று அகோரமூர்த்தி தோன்றினார். (சிவபெருமான் தம் கோபத்தையே அகோர உருவாக்கினார் என்றும் கூறுவர்.) அகோர உருவைக் கண்டமாத்திரத்திலேயே மருத்துவன் சரணாகதி அடைந்து தோத்திரம் செய்தான். சரணடைந்த மருத்துவனை அகோரமூர்த்தியின் காலடியிலும் காயம் பட்ட இடப தேவரை சுவேதாரண்யே சுவரரின் நிருத்த மண்டபத்திலும் இன்றும் சிலை வடிவில் காணலாம்.

சிவ பரம்பொருளே அகோரமூர்த்தியாவார். சிவபெருமானின் 64 மூர்த்தி பேதங்களுள் அகோரமூர்த்தி 43–ஆவது மூர்த்தியாவார். இத்திருவுருவம் இத்தலத்தில் மட்டுமே உண்டு. தட்சயாகத்தை அழிக்கச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய அகோர வீரபத்திரர் வேறு; அகோரமூர்த்தியும் அகோரவீரபத்திரரும் ஒருவரல்லர்; வெவ்வேறு காரியத்திற்காக வெவ்வேறு காலங்களில் தோன்றிய வெவ்வேறு மூர்த்திகள்.

அகோரமூர்த்தியின் திருவுருவைக் காணக் கண்கோடி வேண்டும். இவர் கரியதிருமேனி உடையவர். இவர் இடது காலை முன்வைத்து வலது கால் கட்டைவிரலையும் அடுத்த விரலையும் ஊன்றி நடக்கின்ற கோலத்தில் உள்ளார். எட்டுகரங்களும் ஏழு ஆயுதங்களும் உடைய வீரக்கோலம் பூண்டுள்ளார். கைகளில், வேதாளம், கத்தி உடுக்கை, கபாலம், கேடயம், மணி, திரிசூலம், ஆகிய ஆயுதங்களைத் தாங்கி உள்ளார். சிவந்த ஆடைகளை அணிந்துள்ளார். இவர் தீப்பிழம்புபோன்ற எரிசிகை களுடன் நெற்றிக்கண் நெருப்பைக்கக்க, கோரைப்பற் களுடன், பதினான்கு பாம்புகளைத் திருமேனியில் பூண்டு மணிமாலை அணி செய்யக் கம்பீரமாகக்காட்சி தருகிறார். இவருடைய திருக்கோலத்தைத் தல புராணப் பாட் டொன்று அழகாகச் சித்திரிக்கிறது:

“கருநிறமு மணிமாலை புனையழகும்
வளையெயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல
இணையடியும் இலக எட்டுக்
கரநிலவ மணிபலகை வெண்டலைவாள்
கடிதுடியோர் சூல மேற்று
வெருவமருத் துவனையடர் அகோரசிவன்
துணைப்பதச்சீர் விளம்புவாமே”

மாசிமாதம், கிருஷ்ணபட்சம், பிரதமை திதி, பூர நட்சத்திரம், ஞாயிற்றுக் கிழமை இரவு 12.00 மணிக்கு அகோரமூர்த்தி தோன்றினார். இதேகாலத்தில் ஆண்டு தோறும் அகோரமூர்த்தி மருத்துவனை அடக்கும் ஐந்தாம் திருவிழா நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை இரவிலும் அகோரபூசை நடைபெற்று வருகின்றது. கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் மிக விசேஷ மாகப் பூசை நடைபெறுகின்றது.

தட்சிணாமூர்த்தி

மிகத் தொன்மையான புடைப்புச் சிற்பமாக இங்கு தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரை மேதாவித்யா தட்சிணாமூர்த்தி என்பர், பிற இடங்களில் தட்சிணாமூர்த்திசனகாதிமுனிவருக்கு உபதேசம்செய்தார். இங்கு அவர் பிரமனுக்கு உபதேசம் செய்கிறார். கல்லால மர நிழலில் யோக நிலையில் அமர்ந்துள்ளார். மரக்கிளையில் இவருடைய தோற்பையும் உருத்திராக்கமாலையும் மாட்டப்பெற்றுள்ளன. புராணப்படி இவரே இங்கு வீற்றிருந்த சிவபெருமான் ஆவார். இவரிடமிருந்தே அகோரமூர்த்தி தோன்றினார். இன்றும் ஐந்தாம் திரு-விழாவன்று அகோரமூர்த்தி இவரிடமிருந்தே வேல் வாங்குகிறார்.

பிறமூர்த்திகள்

இங்குள்ள விநாயகரும், பெரியவாரணப் பிள்ளையாரும் சுவேதமாகாளியும் துர்க்கையும் மிக எழி-லானதோற்றம் உடையவர்கள். "இத்தனை அழகான துர்க்கையை எங்கும் கண்டதில்லை." என்று எல்லோரும் வியக்கின்றனர்.

புதன்

ஒன்பது கிரகங்களில் ஒருவரான புதன் கல்வி அறிவு, பேச்சுத்திறமை, இசை, சோதிடம், கணிதம், சிற்பம், மருத்துவம், மொழிகளில் புலமை ஆகியவற்றைத் தரவல்லவர். தாய்மாமனைப்பற்றி இவரைக் கொண்டு அறியலாம். அதனால் இவரை 'மாதுல காரகன்' என்பர். கல்விக்குக் காரகமாக இவர் விளங்குவதால் 'வித்யா காரகன்' என்றும் இவரைக் கூறுவர். இவருக்குத் தனிக் கோயில் புதன் தலமாகிய திருவெண்காட்டில் உள்ளது. வித்தையைத் தரும் இவருடைய சன்னிதி பிரம்ம வித்யாம்பிகையின் இடதுபாகத்தில் அமைந்திருப்பது பொருத்தமே. மேலும் வித்தைக்கு அதிபதியானபிரமனின்

சமாதியும் புதன் சந்நிதிக்குத்தென்பால் அமைந்துள்ளது. புதனின் தந்தையான சந்திரனின் கோயிலும், சந்திர தீர்த்தமும் புதன் சந்நிதிக்கு எதிரே அமைந்துள்ளன. இந்த விசேஷமான அமைப்புடைய புதன் சந்நிதிக்கு வந்து வழிபாடு செய்தால் புதனால் பெறத்தக்கதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி முதலான பேறு-களைப் பெறலாம். மேலும் அலிக்கிரகமான புதன் ஐந்தாம் இடச் சம்பந்தம் பெறுவதனால் சிலருக்குக் குழந்தை பிறக்காது. மேற்படி தோஷம் உள்ளவர்களும் இங்கு வந்து புதனை வழிபட்டால் குழந்தைப் பேற்றினைப் பெறலாம். புதன் ஜாதகத்தில் சரியாக அமையவிட்டால் அறிவுக் குறைபாடும், கல்வியில் மந்தமான நிலையும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்படலாம். மேற்கண்ட குறைகளையும் இங்குள்ள புதனை வழிபட்டு நிவர்த்திசெய்துகொள்ளலாம்.

"ஆத்ரேய கோத்திரத்தில், ஆயில்ய நட்சத்திரத்தில் திருவெண்காட்டில் பிறந்த அந்தணருக்கு உணவும் உடையும் மரகதப் பச்சைக் கல்லும் தானம் செய்து புதனுக்கு விடியற் காலையில் முறைப்படி சாந்தி செய்து. ஸ்கந்த புராணம், புதகவசம், புதஸ்தோத்திரம், புதகாயத்திரி ஆகியவைகளைப் பாராயணம் செய்தால் புதனருளைப் பெறலாம்"[1]

6. தீர்த்தங்கள்

தீர்த்தச் சிறப்பு மிக்கது திருவெண்காட்டுத்தலம், திருக்கோயிலின் உள்ளேயே அக்கினி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்று பெயர்களில் மூன்று திருக்குளங்கள் உள்ளன. காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி என்ற பெயர் களாலும் தலபுராணம் இத்திருக்குளங்களை அழைக்கிறது, உமையின் வேண்டுகோளுக்கு இணங்க சிவன் இங்கு

1 ஸப்தகிரி- (ஜூலை 83) பக்கம் 4

நடனமாடியபோது அவர் சிந்திய மூன்று துளி ஆனந்தக் கண்ணீரும் முக்குளங்களாயினவென்றும், பின்னர் அகோரமூர்த்தியின் மூன்று கண்களும் சிந்திய நீர்த்துளிகளும் முக்குளத்திலும் முறையே கலந்தனவென்றும் தலபுராணம் கூறும்.

பூம்புகாரில் சோமகுண்டம், சூரிய குண்டம் என்றும் இருதடாகங்கள் இருந்தனவென்றும் அவைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்தைக் கைதொழுவார்தம் கணவரைக் கூடுவர் என்றும் தேவந்தி என்பவள் கண்ணகிக்கு கூறுகிறாள். அவள் குறிப்பிடும் சோம சூரிய குண்டங்கள் திருவெண்காட்டு சோம, சூரிய தீர்த்தங்களாக இருந்திருக்கக் கூடும் என்று சிலர் கூறுவர் என்று டாக்டர் உ. வே.சா.சிலப்பதிகாரத்தில் குறிப்புரை வரைந்துள்ளார்.

திருஞானசம்பந்தர்,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளம் நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

என்று முக்குளச் சிறப்பைப் பாடுகிறார். மேலும் "முக்குளம் நன் குடையானும்" என்றும் "தட மூன்றுடையான்" என்றும் தம் பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

மும்மூர்த்தி தீர்த்தம், மூவிலைச் சூல தீர்த்தம், முக்குள தீர்த்தம், அகர முதலான மூவெழுத்துத் தீர்த்தம், தன்ம தீர்த்தம், தானதீர்த்தம் என்னும் பல பெயர்களால் புராணம் இவைகளை அழைக்கிறது.

மக்கள் இத்திருக்குளங்களில் மூழ்கிக் குழந்தைப்பேறு முதலிய பேறுகளைப் பெறுகின்றனர்; இதன் கரைகளில்

தென்புலத்தார் வழிபாடும், தான தருமங்களும் செய்து பெரும் புண்ணியம் ஈட்டுகின்றனர்.

7. தலவிருட்சங்கள்

வடவால், கொன்றை, வில்வம் ஆகிய மூன்றும் இங்கு தலவிருட்சங்கள்.

கயிலாயநாதன் கல்லால நிழலில் அமர்ந்திருப்பான். சிவபெருமானுக்கு எத்தனையோ தல விருட்சங்கள் இருப்பினும், ஆலமரமே அவனுக்கு மிகவும் ஏற்புடையது என்பதை ஆலமர்செல்வன் என்னும் அவனுடைய பெயரே காட்டும். சிவன் என்னும் பெயரே காணப்படாத சங்க இலக்கியத்தில் ஆலமர் செல்வன் என்னும் பெயர் பயின்று வருகின்றது. அத்தகைய ஆலமரமே இங்குத் தலவிருட்சமாக இருப்பதும்[1] அந்த ஆலமரத்தடியில் சிவ பெருமான் வீற்றிருந்தான் எனப் புராணம் சொல்வதும் இவ்வூரின் தொன்மையையும் சிறப்பையும் காட்டும். கயாவில் உள்ளது போன்றே இதுவும் அக்ஷய வடமெனும் அழியாத ஆலமரம். கயையில் விஷ்ணுபாதம் உள்ளது. இங்குள்ள ஆலமரத்தடியில் ருத்ரபாதம் உள்ளது. ருத்ர பாதங்களின் பக்கத்தில் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது பிதிர்க்கடன் செய்ய இது மிகவும் உத்தமமான இடம்.

சிவபெருமானுக்கு உகந்த மலர்களில் கொன்றை மலர் முதலிடம் பெறுவது. கொன்றை வேணியனாகிய சிவனுக்கு கொன்றையே இங்குத் தலவிருட்சமாக உள்ளது. வில்வமில்லாத சிவன்கோயில் உண்டா? வில்வ பத்திரமில்லாத சிவபூசைதான் உண்டா? இங்கு வில்வ மரமும் தலவிருட்சம், அதனடியில் பிரம்ம சமாதி உள்ளது.

---

1. அகநானூற்றின் 181-ஆம் பாடல் குறிப்பிடும் ஆலமுற்றம் இது வாக இருந்திருக்கலாம்.

8. வழிபாடு செய்தவர்கள் வரலாறு

மெய்கண்டார்

பெண்ணாகடம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த அச்சுதகளப்பாளர் என்பவருக்கு நெடுங்காலமாகக் குழந்தை பிறக்க வில்லை. அவர் தமது குருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரை அணுகித் தம் குறையைத் தெரிவித்தார். அருணந்தியார் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்தபோது "பேயடையா" எனத் தொடங்கும் திரு வெண்காட்டுத்தேவாரம்முன்னின்றது. அப்பாடலின்படி அச்சுதகளப்பாளர் தம் மனைவியுடன் திருவெண் காட்டிற்கு வந்து முறையாக முக்குளம் மூழ்கி, திருவெண் காடரை வழிபட்டு வந்தார்.

ஒருநாள் இரவு அச்சுதகளப்பாளரின் கனவில்வெண் காடர் தோன்றி, "உமக்கு இப்பிறப்பில் பிள்ளைப் பேறு இல்லை; எனினும் நம் ஞானக் குழந்தையின் பாடலில் நம்பிக்கை வைத்து நம்மை வழிபட்டு வருவதால் ஞான சம்பந்தரைப்போன்றே உமக்கு ஒரு குழந்தை பிறக்கும்" என்று அருளிச் செய்தார். அவ்வண்ணமே அச்சுதகளப் பாளரின் மனைவி கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றாள். அக்குழந்தைக்குத் திருவெண்காடன் எனப் பெயரிட்டுப் பெற்றோர் குழந்தையுடன் தம் ஊருக்குத் திரும்பினர். சின்னாளில் அச்சுதகளப்பாளர் இறைவனடி சேரவே திருவெண்காடரும் அவர் தாயும் திருவெண்ணெய் நல்லூ ருக்குச்சென்றனர். திருவெண்ணெய்நல்லூரில்கயிலாயத்தி லிருந்துவான்வழியே வந்த பரஞ்சோதிமுனிவர்திருவெண் காடருக்குத் தீட்சை செய்து தம் குருவின் திருநாமமாகிய "சத்திய ஞானதரிசினிகள்" என்னும் தீட்சா நாமத்தைச் சூட்டினார் அத்திருநாமத்தின் தமிழ்வடிவான 'மெய்கண்டார்' என்னும் திருநாமமே அக்குழந்தைக்குப் பின்னர் வழங்குவதாயிற்று. மெய்கண்டார் சித்தாந்த சாத்திர முழு

முதல் நூலாகிய சிவஞானபோதம் எனும் ஒப்பற்ற நூலை அருளிச் செய்தார். சந்தானகுரவருள் முதல்வரும் ஆனார். அவருடைய குடும்ப குருவான அருணந்தியாரே அவருக்கு முதல் சீடரும் ஆகி சிவஞான போதத்திற்கு விரிநூலாகச் சிவஞானசித்தியார் என்னும் நூலைச் செய்தருளினார்.

பட்டினத்தடிகள்

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சிவநேசருக்கும் ஞானகாலாம்பிகைக்கும் தவப்பயனாய் பிறந்தவர் திருவெண்காடர். அவர் இளமையிலேயே சிவபூசையை செவ்வனே இயற்ற ஆர்வம் கொண்டார். அவர் கனவில் சிவபெருமான் அடியார் வடிவில் தோன்றி நாளை திங்கட் கிழமையன்று திருவெண்காட்டை அடைந்து, அங்கு வரும் ஓர் அடியார் தரும் சிவலிங்கத்தைப் பெற்று சிவபூசை செய்துவருகவெனப் பணித்தார். அதன்படி தம் தாயாருடன் ஆவணிமாதத் திருவோண நட்சத்திரம் பிரதோஷம் கூடிய நன்னாளில் திருவெண்காட்டிற்கு வந்து, முக்குளம் மூழ்கி, திருவெண்காடரை வழிபடுகையில் ஒரு முனிவர் அங்கு தோன்றி திருவெண்காடருக்குச் சிவதீட்சை செய்து சிவலிங்கமும் கொடுத்து மறைந்தார். திருவெண்காடர் பின்னாளில் பெருந்துறவியானதையும் அவர் அருளிச் செய்துள்ள பாடல்கள் பதினோராந்திருமுறையில் இடம் பெற்றுள்ளதையும் சைவ உலகம் நன்கறியும்.

இந்திரன்

இந்திரன், விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தை இங்கு வந்து வெண்காடரை வழிபட்டுநீக்கிக்கொண்டான், இதனை "விண்ணவர்கோன் வழிபட வெண்காடிடமா விரும்பினனே" என்றும், "இந்திரன் வழிபட நின்ற எம்மிறை" என்றும் திருஞானசம்பந்தர் பாடுகிறார். இங்கு நடைபெறும் மகோற்சவம் இந்திர மகோற்சவம் என

அழைக்கப்படுகிறது. இந்திரனே வந்திருந்து இதனை நடத்திவைப்பதாக ஐதீகம்.

ஐராவதம்

இந்திரன், ஐராவதம் என்னும் தன் வெள்ளை யானையின்மேல் பவனி வந்தபோது துருவாச முனிவர் தந்த மாலையைமதியாது வாங்கி,யானையின் மத்தகத்தின் மேல் வைக்க, யானையோ அம்மாலையைக் காலிலிட்டு மிதித்தது. துருவாசர் சினந்து யானையைக் காட்டானைஆகுமாறு சபித்தார். பின்னர் யானை தவறுக்கு வருந்தி, முனிவரைப் பணிந்து சாபவிமோசனம் வேண்டியது. முனிவர், திருவெண்காட்டீசரை சென்று தொழச் சாபம் நீங்குமென்றார். அதன்படி ஐராவதம் திருவெண்காட்டில் சில காலம் காட்டானையாகத் திரிந்து, பின்னர் திருவெண்காட்டின் ஈசான திசையில் தன் பெயரில் ஒரு தடாகம் அமைத்துச் சிவலிங்கம் ஸ்தாபித்து, வழிபாடியற்றி ஈசன் அருள்பெற்று மீண்டும் இந்திரலோகம் சேர்ந்தது. யானை அமைத்த தடாகம் இன்றும் யானை மடு என்று வழங்குகிறது. யானை வெண்காட்டில் தவமியற்றியதைத் திருஞானசம்பந்தர், "வெள்ளானை தவஞ்செய்யும் மேதகு வெண்காட்டான்" என்றும், யானை வழிபட்டதை 'பெரிய உருவத்தானை வணங்கும் வெண்காடே' என்றும், 'இந்திரன் கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்' என்றும், யானை அருள் பெற்றதை, 'அடைந்த ஐராவதம் பணிய மிக்க தனக்கருள் சுரக்கும் வெண்காடு' என்றும் பாடுகின்றார். திருநாவுக்கரசர் 'வெள்ளானை வேண்டும் வரங்கொடுப்பர்' என்று பாடுகிறார்.

சிவப்பிரியர்

முற்கலமுனிவரின் குமாரரான சிவப்பிரியர் திருவெண்காட்டிற்கு வந்து ஈசனை வழிபாடு செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் தாமரை மலர்களைக் கொய்து வரும்போது ஐராவதமெனும் யானையால்

தாக்கப்பட்டார். அவர்நெஞ்சினுள் அஞ்செழுத்து அழுந்தியிருந்ததால் யானையின் கொம்புகள் அவரைக் குத்தாது யானையின் முகத்தில் அழுந்தி வயிற்றினுட்சென்றது. யானை நல்லுணர்வு பெற்றுச் சிவப்பிரியரிடம் மன்னிப்பு வேண்ட சிவப்பிரியர் அதனை மன்னித்தருளினார். பின்னர் ஒரு வைகாசிமாதத்து அமாவாசையில் சிவப்பிரியர் சிவஜோதியில் கலந்தார்.

கந்தபுராணத் திருவிளையாட்டுப் படலம்

'காழற்று தந்தம் அறஏகி வெண்காட்டில் ஈசன்
கேழற்ற தாளர்ச்சனை செய்துகிடைத்து வைகும்வேழம்'
என்றும்,

திருவிளையாடற்புராண அர்ச்சனைப் படலம்.

"கோடு நான்குடைய வேழம் தானவன் குறைந்த கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது"

என்றும் இந்நிகழ்ச்சியைப் பாடுகிறது.

வேதராசி

வேதராசி என்ற அந்தணன் ஊருக்குச் செல்லும் போது தான் எடுத்துச் சென்ற கட்டமுதை ஓர் ஆலமரப் பொந்தில் வைத்தான். அச்சோற்றில் பாம்பொன்று நஞ்சை உகந்தது. அவன் அச்சோற்றினை ஒரு மறையவனுக்கு இட, மறையவன் அதனை உண்டு மாண்டான். வேதராசியைப் பிரம்மஹத்தி தோஷம் தொடர்ந்தது. அவன் திருவெண்காட்டை அடைந்ததும் அது அவனை விட்டு நீங்கியது. வேதராசி வெண்காட்டீசனை வழிபட்டு எமதூதரிடமிருந்து தப்பி இறையடி நீழலை எய்தினான்.

சுவேதகேது

உத்தாலகமுனிவரின் புத்திரராகிய சுவேதகேது எட்டு வயதுடன் தம் ஆயுள் முடியுமென்பதை உணர்ந்து

திருவெண்காட்டிற்கு வந்து சிவபூசை செய்துகொண்டு இருந்தார். எட்டாம் வயது முடியும் நாளில் எமன் வந்து சுவேதகேதுவின் மேல் பாசத்தை வீச, சிவபூசை தடை படுகிறதே என் அவர் வருந்த சிவபெருமான் வெளிப் போந்து எமன்வலியை அழித்தருளினார். பின்னர் சுவேத கேது திருவெண்காட்டில் சிலகாலமிருந்து இறைவனின் ஆடல் கண்டபின் அவன் திருவடியிற் சேர்ந்தார். சிவன் எமனை அழித்ததை வால்மீகி குறிப்பிடுவதை முன்பே கண்டோம். சம்பந்தர் 'வெங்காலன் உயிர் விண்டபினை' என்று இவ்வூர்ப் பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

சுவேதன்

சுவேதன் என்னும் மன்னர் வாதாபி எனும் தன் மகனுக்கு அரசாட்சியை அளித்து விட்டு, தன் மனைவி சுலோசனையுடன் வானப்பிரஸ்தாச்சிரமத்தில் இருக்கை யில் தன் மனைவியைப் பிரிந்து பின்னர் சாவில்லாத வரந் தரும் திருவெண்காட்டை அடைந்து தவமும் வழிபாடும் செய்து வந்தார். ஒருநாள் இயமன் சுவேதனை அணுகிப் பாசத்தைப் பூட்டினான். சுவேதன் சிவலிங்கத்தைத் தழுவிக்கொண்டான். அப்போது திருவெண்காடர் அங்கே தோன்ற காலன் அஞ்சி ஓடி வீழ்ந்திறந்தான். சிவ பெருமான் சுவேதனுக்குச் சிவசொரூபமளித்தார். பின்னர் தேவர்களின் வேண்டுதலுக்கிரங்கி இயமனையும் எழுப்பியருளினார்.

சத்தியநல்விரதன்

சத்யநல்விரதன் என்பவர் நாகையை ஆண்ட மன்னர், இவன் ஆட்சிக்காலத்தில் சாக்தமத பிராமணர் ஒருவர் பசியோடு வந்த பிராமணருக்குக் கள்ளைக் கொடுத்துவிட்டார். கள்ளுண்ட பிராமணரைத்திருவெண் காட்டிற்கு அழைத்து வந்து அவர் செய்த பாவத்தைக் கழுவத் துணை செய்தான் சத்யநல்விரதன். பின்னர்

தன்னரசை மகனிடம் விடுத்து திருவெண்காட்டிலேயே தங்கி வழிபாடியற்றி இறையருள் பெற்றான்.

இவர்களைத் தவிர கணபதி, முருகன், மாதங்கி, மகாலெட்சுமி, விஷ்ணு, இராமர், பிரமன் ஆகிய தெய்வங்களும் சூரியன், சந்திரன், அக்கினி முதலிய தேவரும், அகத்தியர், நாரதர், வியாக்கிரபாதன், கிருஷ்ணத் வைபாயனர், சுகர் முதலிய முனிவர்களும், நால்வர் பெருமக்களும் இங்கு வழிப்பட்டுப் பெரும்பேறு எய்தியுள்ளனர்.

9. தலத்தைப் பாடியோர்

திருஞானசம்பந்தர்

இவர் இத்தலத்தில் மூன்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடியுள்ளார். இறைவனின் திருக்கோல வனப்பையும், திருவருட் திறத்தையும், திருவெண்காட்டின் இயற்கை வளத்தையும் இனிதாகப் பாடியுள்ளார். வெண்காட்டு முக்குள நீராடுவாரைத் தீவினைகள் தீண்டாவென்றும், பிள்ளைப் பேறும் பிற வரமும் பெறுவாரென்றும் அருளுகிறார். வெண்காடன் அடியாரைத் துயரங்கள் அண்டா வண்ணம் காப்பான் என்றும் தொழுவார் தங்கள் துயரங்கள் தள்ளிப்போக அருளுந் தலைவன் அவனென்றும் பாடுகிறார். திருவெண்காட்டில் பசுங் கிள்ளைகள் பண்மொழியால் அவன் நாமம் பல ஓதும் என்றும், வேதத் தொலியால் கிளி சொற்பயிலும், என்றும் வேள்விப் புகையால் வானம் இருளாகும் என்றும் பாடுகின்றார்.

திருநாவுக்கரசர்

இவர் இத்தலத்தில் ஒரு திருக்குறுந்தொகையும் ஒரு திருத்தாண்டகமும் பாடி உள்ளார். "வெண்காட்டை அடைந்து உய் மட நெஞ்சமே" என்னும் ஈற்றடி

கொண்ட திருக்குறுந்தொகை நெஞ்சுக்கு அறிவுறுத்தும் கருத்துக்கள் பல. அவற்றுள் ஒன்று 'ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே; வான் நோக்கும் வழியாவது அறிமினோ' என்பதாகும்.

திருத்தாண்டகம் நாயக-நாயகி பாவத்தில் பாடப் பெற்றுள்ளது. தன்நெஞ்சைக்கவர்ந்த நிமலனின் பெருமையை நினைந்துருகும் தலைவியின் தமிழரு மையைத் தாண்டகம் முழுவதும் காணலாம். பின்னாளில் தனிச்சிற்றிலக்கிய வடிவந்தாங்கிய உலா இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழும் இத்திருத்தாண்டகம் உலாத் தலைவனின் தசாங்கம் கூறும் பகுதியாக இத்தாண்டகத் தின் முதற்பாடல் அமைந்து உள்ளதை அனுபவித்து மகிழலாம்.

'வெண்காடே என்பீராகில் வீடாத வல்வினைநோய்
வீட்டலாமே'
'வேதத்து ஒலி கொண்டு வீணை கேட்பார் வெண்காடு
மேவிய விகிர்தனாரே'
'வேண்டும் வரங்கொடுத்து விகிர்தங்களா நடப்பர்
வெண்காடு மேவிய விகிர்தனாரே'

என்பன போன்ற தொடர்களை நெஞ்சம் மறவாது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சுந்தரர் இத்தலத்தைப் பற்றி ஒரு பதிகம் பாடி யுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் பெருமானுடைய பெருமைகளைப் பாடியபின் "இத்துணைப் பெருமை களையும் உடைய நீர் மனைகள் தோறும் விடங்கராகித் திரிந்ததும், காமனை எரித்ததும் பிச்சைக்கு எருதேறி அலைந்ததும், கடல் நஞ்சுண்டதும், வேதமோதித் திரிந்ததும், யானையை உரித்ததும் அயனும், மாலும் அணுகா வண்ணம் அழற்பிழம்பாய்த் திரிந்ததும் என்னே;" என்று வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

மாணிக்கவாசகர்

திருவாசகத்தின் கீர்த்தித் திருவகவலிலும் திருக் கோவையாரிலும் திருவெண்காட்டை மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

பதினோராந் திருமுறையில், கபிலதேவநாயனார் திரு இரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகிய இரு பிரபந்தங்களிலும் திருவெண்காட்டைப் பாடியுள்ளார்.

பதினோராந்திருமுறையில், பரணதேவ நாயனாரும் சிவபெருமான் திருவந்தாதியில் திருவெண்காட்டீசரைப் பாடியுள்ளார்.

பதினோராந்திருமுறையில் உள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி ஆகியவற்றிலும் பட்டினத்தார் திருவெண்காட்டைப் பாடுகின்றார்.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்திலும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும் சேக்கிழார் திருவெண்காட்டைக் குறித்துள்ளார். திருஞானசம்பந்தர் புராணத்தில் சேக்கிழார் பாடிய 'மெய்ப்பொருளாயினாரை' என்றுதொடங்கும்பாடல்பிற்காலத்தே திருவெண்காட்டில் மெய்கண்டாரின் அவதாரம் நிகழும் என்பதைச் சூட்சமமாகக் குறிப்பிடுவதுபோல் அமைந்துள்ளதை, உணர்ந்து மகிழலாம்.1

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழில் காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் இத்தலத்து முருகனை ஒரு பாடலில் பாடுகிறார்.

சிவாலய மான்மியக் கோவை என்ற நூலில் சோமசுந்தரதேசிகர் ஒரு பாடலில் வெண்காடரையும் பெரிய நாயகியையும் பாடியுள்ளார்.

---

1. மெய்கண்டார் (மாத இதழ்) —திருவாவடுதுறை.

திருவிளையாடற்புராணத்தில் அருச்சனைப் படலத்தில் இப்பதிப்பினைப் பற்றிய குறிப்புள்ளது.

கந்தபுராணத்தில் விளையாட்டுப் படலத்தில் கச்சியப்பர் ஒரு பாடலில் திருவெண்காட்டில் ஐராவதம் வழிபட்டதைப் பாடுகிறார்.

திருவெண்காட்டுப் புராணம் என்னும் நூலை சைவ எல்லப்பநாவலர் என்னும் பெரும்புலவர் இயற்றியுள்ளார். இவர் திருவெண்காட்டுக்கு அண்மையில் உள்ள இராதாநல்லூரில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்று உறுதியுடன் பாடிய சைவ பற்றுடையவர் இவர். எனவே சைவ என்னும் அடைமொழிக்கு இவர் உரியவரானார். அருணாசலப்புராணம், செவ்வந்திப்புராணம், அருணைக் கலம்பகம் ஆகிய 16 நூல்களை இவர் எழுதியுள்ளார். திருவெண்காட்டுப்புராணம் 18 சருக்கங்களையும், 614 பாடல்களையும் கொண்டது. இந்நூல்பெருந்தோட்டம் திரு. தெ. சி. துரைசாமிப் பிள்ளை என்பார் எழுதிய வசனத்துடன் 1905-ல் அச்சிடப் பெற்றுள்ளது. [1]

ஸ்ரீ அகோர அந்தாதி என்னும் நூலைச் சிவானந்தர் என்பவர் பாடியுள்ளார். 1906-ல்இந்நூல் அச்சாகியுள்ளது.

"ஸ்வேதாரண்ய மகாத்மியம்" என்னும் நூல் தஞ்சை சரஸ்வதி நூல் நிலையத்தினின்று எழுதப் பெற்றுள்ளது இது கந்தபுராணத்தில் சங்கர சம்ஹிதையில் உள்ளது. [2]

---

1. திருவெண்காட்டுப் புராணம், ஸ்ரீ அகோர அந்தாதி ஆகிய இரு நூல்களும் உரையுடன் கையெழுத்துப் பிரதியாக திரு. அகர முதல்வன் அவர்களிடம் உள்ளது. விரும்புவோர் அவைகளை அச்சிட்டு வெளியிடலாம்.

2. ஸ்வேதாரண்ய மகாத்மியம் கையெழுத்துப்பிரதி திரு. நடேச குருக்கள் அவர்களிடம் உள்ளது.



அம்பாள் சன்னிதி

1976-ல் மத்திய அரசின் உதவியுடன் திரு இராமச் சந்திர சாஸ்திரிகள் என்பவர் ஸ்வேதாரண்ய மகாத் மியத்தை வடமொழியில் தமிழ்மொழிப் பெயர்ப்போடு வெளியிட்டுள்ளார்.

10. செவிவழிச் செய்திகள்

பிள்ளையிடுக்கி அம்மன்

திருஞானசம்பந்தர் திருவெண்காட்டின் வட எல்லைக்கு வந்தபோது அவருக்கு "ஊரெல்லாம் சிவலோகமாகவும், மணலெல்லாம் சிவலிங்கமாகவும்" தோன்றின. ஆதலின் இத்தலத்தை மிதித்தற்கஞ்சி "அம்மா" என்றழைத்தார். அது கேட்டுப் பெரிய நாயகிஅம்மை அங்குத் தோன்றி ஆளுடைய பிள்ளையைத் தம் இடுப்பில் கோயிலுக்கு எடுத்து வந்தார். பிள்ளையை இடுப்பில் தாங்கிய வடிவில் உள்ள அம்பாளின் சிலை/ பிரம்மவித்தியாம்பிகை கோயி -லின் மேற்கு உட்பிரகாரத்தில் உள்ளது. சம்பந்தர் அம் -பாளைக் கூப்பிட்ட இடத்திலுள்ள குளத்தைக் 'கூப்பிட் டான் குளம்' என்பர். அது இன்று கோட்டான் குளம் என்று வழங்குகிறது. அங்குள்ள விநாயகரின் பெயர் ஞானசம்பந்த விநாயகர்.

விலங்கு தறித்த விநாயகர்

இத்தொல்பதியின் தென்மேற்குத் திசையில் எழுந் தருளியிருப்பவர் ஸ்ரீ விலங்கு தறித்த விநாயகர். துறவு பூண்ட பட்டினத்தடிகள் தம் சொத்துக்களை ஊரார் எடுத்துச் செல்லும்படி நிதியறையைத் திறந்துவிடுமாறு தம் கணக்கர் சேந்தனாருக்கு ஆணையிட்டார். அதன் படி செய்த சேந்தனாரை, இழந்த பொருட்களுக்குக் கணக்கு காட்ட வேண்டும் என்று கூறி, அரசன் விலங்கு பூட்டிச் சிறையிலடைத்தான். சேந்தனாரின் மனைவி மக்கள் அதனைப் பட்டினத்தடிகளிடம் சென்று கூறினர், பட்டினத்தடிகள் வெண்காட்டு இறைவனிடம்,

"மத்தளைத் தயிருண்டானும் மலர்மிசை மன்னினானும்
நித்தமும் தேடிக்காணா நிமலனே யமலமூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை
வேந்தனிட்ட
கைத்தளை நீக்கியென் முன் காட்டு வெண்
காட்டுளானே"

என வேண்டினார், சிவபெருமான் கட்டளைப்படி விநாயகர் சேந்தனாரின் விலங்கைத் தறித்து (உடைத்து) அவரைச் சிறையினின்று விடுவித்தார். அதனால் விலங்கு தறித்த விநாயகர் என்னும் பெயர் பெற்றார். இன்றும் பட்டினத்தடிகள் சிவதீட்சைக்காக திருவெண்காட்டிற்கு எழுந்தருளும் போது, விலங்கு தறித்த விநாயகரை வந்து வணங்கிச் செல்லுகிற விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

காணாபத்யம்

கணபதி வழிபாடு பற்றிய காணாபத்ய சாத்திரங்கள் மயூரேசத்தில் மறைந்து போனபின் க்ஷேத்ரபாலபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகளுக்கு மீண்டும் காணாபத்ய இரகசியங்களை ஸ்ரீ அகோரமூர்த்தியே அருளிச் செய்தார்.[1] காணாபத்யர்களின் குரு அகோரமூர்த்தியே.

முக்குள நயினார்கள்

முக்குள நயினார்கள் என்னும் சைவ மரபினர் தலையில் விளக்கைச் சுமந்து கொண்டு முக்குளம் மூழ்கி எழுந்தபின்னும் அவ்விளக்குகள் அணையாதிருந்தனவாம். இம்மரபினர் இன்றும் ஆவணி மாதத்தில் இங்கு வந்து வழிபாடு செய்து வருகின்றனர்.

---

1. இதன் விவரத்தை 1960 ஆம் ஆண்டு ஆனந்த விகடன் தீபாவளி மலரிலும் திரு. த. அகரமுதல்வன் அவர்கள் எழுதிய 'பெருமைமிகு பிள்ளையார்' என்ற நூலிலும் காணலாம்.

காலரா ஒழிந்தது

இப்பகுதியிலுள்ள மீனவர் வாழுமிடங்களில் காலரா நோய் கடுமையாகப்பரவும்போதுஅகோரமூர்த்தியும்காளியும் இருவர்மேல் ஆவேசிப்பர். அவ்விருவரும் நோயுள்ள இடத்திற்குச் சென்று திருநீறு வழங்க நோய் மறையும்.

11. நித்ய பூஜைகளும் திருவிழாக்களும்

நித்யபூசைகள்

இத்திருக்கோயிலில் தினசரி ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன.

அவையாவன:-

1.	திருப்பள்ளி எழுச்சி	காலை மணி	6.00	முதல்	7.00
2.	காலசந்தி	”	8.30	”	10.00
3.	உச்சிக்காலம்	”	11.00	”	12.00
4.	சாயரட்சை	மாலை	5.30	”	6.30
5.	இரண்டாம் காலம்	”	7.30	”	8.30
6.	அர்த்தசாமம்	இரவு	8.30	”	9.30

திருவிழாக்கள்

திங்கள்தோறும் நடைபெறுவன:

சித்திரை :— திருவோணத்தில் நடராசர் அபிஷேகம்.

வைகாசி :— அமாவாசையில் சிவப்பிரியர் மணிகர்ணிகையில் தீர்த்தமாடுதல். வெள்ளை யானைக்குச் சாப விமோசனம்.

ஆனி :— உத்திரத்தில் நடராசர் அபிஷேகம்.

ஆடி :— பட்டினத்தார் சிவதீட்சை பெறத் திருவெண் காட்டிற்கு வருதல். சிவபெருமான் பிட்சாட னர் வடிவில் மணிகர்ணிகையில் தீர்த்தம் கொடுத்தல். சிவபூசை செய்வித்தல். இரவு ரிஷப வாகனராய்க் காட்சி தருதல். அம்பா-ளுக்கு ஆடிப்பூர பத்து நாள் விழா. ஆடி அமாவாசைக்கு சங்கமத்திற்கு சுவாமி எழுந்தருளல்.

ஆவணி :— வளர்பிறை சதுர்த்தசியில் நடராசர் அபிஷேகம். கோகுலாஷ்டமி பெருமாள் சேவை. விநாயகர் சதுர்த்தி. ஆவணி மூலம் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.

புரட்டாசி :— வளர்பிறை சதுர்த்தசியில் நடராசர் அபிஷேகம், நிறைபணி, தேவேந்திரபூசை, நவராத்திரி விழா, விஜயதசமியன்று சுவாமி மணிகர்ணிகை தீர்த்தக் கரையில் அம்பு போடல். அம்பாளுக்கு இலட்சார்ச்சனை.

ஐப்பசி :— அசுபதியில் அன்னாபிஷேகம். வளர்பிறை பிரதமை தொடங்கி கந்த சஷ்டி விழா.

கார்த்திகை:- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஸ்ரீ அகோரமூர்த்திக்கு அபிஷேகமும் பூசையும் நடைபெறும். மூன்றாவது ஞாயிறன்று மகா ருத்ராபிஷேகமும் விபூதி அலங்காரமும் நடைபெறும். சோமாவாரந்தோறும் சுவேதாரண்யேசுவரருக்கு 1008 சங்கா அபிஷேகமும் நடைபெறும். பரணி, கார்த்திகை தீபவிழாக்கள்.

மார்கழி :— தனுர்மாத பூசை, சதயத்தன்று மாணிக்கவாசகர் விழா, டோலோற்சவம் திருவாதிரையில் நடராசர் தரிசனம் நடைபெறும்.

தை :— சங்கராந்தி, மறுநாள் அம்பாள் கனுகுளிக்க மணிகர்ணிகைக்குப்போதல், மாலை சுவாமி குதிரை வாகனத்தில் பாரிவேட்டைக்குச் செல்லுதல்.

ஐயனாருக்குப் பத்துநாள் விழா.

பிடாரிக்குப் பத்துநாள் விழா.

மாசி :— இந்திரப் பெருவிழா, வளர்பிறை துவாதசி புனர்பூசத்தில் கொடியேற்றம்.

2ஆம் திருவிழா.

3ஆம் திருவிழா. சுவேதகேதுவைப் பிடித்த எமனை எரித்தல். பூத வாகனம், மொட்டைச் சப்பரம்.

4ஆம் திருவிழா. மகம். பௌர்ணமி திதியில் காவிரி சங்கமத்துறைக்குச் சுவாமி எழுந்தருளல்.

5ஆம் திருவிழா, பூர நட்சத்திரம். அகோர மூர்த்தி எழுந்தருளல். இரவு மருத்துவாசுர சங்காரம். ரிஷப வாகனக்காட்சி, தெருவடைச்சான்.

6ஆம் திருவிழா. யானை வாகனம்.

7ஆம் திருவிழா. திருக்கல்யாணம். புஷ்பப் பல்லக்கு.

8ஆம் திருவிழா. பிட்சாடனர் விழா. அறுபத்து மூவர் வீதி உலா.

9ஆம் திருவிழா. திருத்தேர்.

10ஆம் திருவிழா. காலை நடராசர் வீதி உலா. முக்குளத்தீர்த்தம் கொடுத்தல் மாலை பஞ்சமூர்த்திகள் ரிஷபவாகனத்தில் மணிகர்ணிகைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல்.

11ஆம் திருவிழா. தெப்பத் திருவிழா,

பங்குனி :— சுக்லபட்சப்பிரதமையில் அகோரமூர்த்திக்கு இலட்சார்ச்சனை ஆரம்பம். பங்குனி உத்திரத்தில் (பௌர்ணமியில்) பூர்த்தி. மறுதினம் விடையாற்றி.

12. நிர்வாகமும் திருப்பணிகளும்

நிர்வாகம்

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையைச் சேர்ந்தது, இதனை நிர்வகிக்க நிர்வாக அதிகாரி ஒருவரும் அறங்காவலர் குழுவினர் ஐவரும் உள்ளனர். கோயிலுக்கு நன்செய் புன்செய் நிலங்கள் ஏக்கர் 1613.92ம் உள்ளது. கோயிலுக்குள்ளேயே நந்தவனங்கள் உள்ளன. கோயிலுக்கு வெளியே தென்னை, மா, பலா, தேக்கு, வாழை, மூங்கில், கொய்யா, புளி, நெல்லி, நாவல், விளா, முந்திரி, இலுப்பை, சவுக்கு முதலிய மரங்களைக்கொண்ட தோட்டங்களும் உள்ளன. வழிபாட்டிற்கு வருவார் தங்குவதற்கு மேல சந்நிதியில் 4 அறைகளைக் கொண்ட திருக்கோயிலுக்குச் சொந்தமான விடுதி உள்ளது.

விழா நாட்களில் இன்னிசையும் சொற்பொழிவுகளும் நடைபெறும். சிவகாமப் பயிற்சி வகுப்பும், தேவாரப் பாடசாலையும் முன்னர் நடைபெற்றன. தற்போது கோயில் நிர்வாகத்தின் கீழ் மெய்கண்டாரின் பெயரில் ஒரு தொடக்கப் பள்ளியும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. திருக்கோயிலினுள் ஒரு சமய நூலகமும் உண்டு.

ஊரிலுள்ள இந்திர விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், பிடாரிகோயில், ஐயனார் கோயில் ஆகிய

சுற்றுக்கோயில்களுக்கு நித்யபூசைக்கும் விழாச் செலவுக்கும் திருக்கோயில் உதவி செய்கிறது.

திருப்பணிகள்

முதலாம் இராசராச சோழன் காலத்திய (கி.பி. 985–1014) கல்வெட்டு இங்குள்ளதால் இக்கோயில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கற்றளியாகி இருத்தல் வேண்டும். அதற்குமுன் செங்கல் கோயிலாக இருந்திருத்தல் வேண்டும். மூலஸ்தானமும் சுற்றுக்கோயில்களும் கருங்கல்லால் கட்டப்பெற்றவை. மூலஸ்தான விமானம் ஒரே கருங்கல்லால் ஆனது.

திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் காலத்தில் வைத்தியச் சக்ரவர்த்தி என்பவர் அரசன் பெயரால் வீரபாண்டீச்சுரம் உடையார் கோயிலும் வேயனதோளி நாச்சியார் கோயிலும் கட்டியதை ஒரு கல்வெட்டால் அறிகிறோம்.

'விக்கிரமசோழன் மண்டபம்' விக்கிரம சோழனால் கட்டப்பட்டிருக்கலாம்.

தஞ்சாவூர் மகாராட்டிர மன்னர் துக்கோஜி காலத்தில் (கி.பி. 1730) ஸ்ரீ தண்டாயுதபண்டாரம் என்பவர் பெரியநாயகி அம்மன்கோயிலின் மதிற்சுவரைக் கட்டி உள்ளார்.

தருமை ஆதீனத்தைச்சேர்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் நடராச சபை கட்டப்பெற்றுள்ளது. தேவக்கோட்டை திரு மு. இராம. சுப. சுப்ரமணியன் செட்டியார் அவர்களால் பெரியநாயகி அம்பாள் திருக்கோயில் திருப்பணி 21.6.1937 அன்று தொடங்கப்பெற்று அவர்களுடைய குமாரர்கள் திரு. வெங்டாசலம்செட்டியார் திரு சுவாமிநாதன் செட்டியார் ஆகியோர்களால் நிறைவு செய்யப் பெற்றுள்ளது. 16. 6. 1940ல் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பெற்றுள்ளது. பிற கோயில்களும் விமானங்களும் புதுப்பிக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது,

1959ல் திருக்கல்யாண மண்டபம் ரூ. 26, 000/- செலவில் கட்டப்பெற்றது.

1961ல் அகோரமூர்த்தி உற்சவருக்கும் மெய்கண்டாருக்கும் கோயில்கள் கட்டப்பெற்றன.

26. 3. 1961ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இராசகோபுரங்களைத் திருப்பணிசெய்து அனைத்து சன்னிதிகளையும் செப்பனிட்டு மீண்டும் மகாகும்பாபிஷேகம் 13-7-86 அன்று நடைபெற்றது.

15. கல்வெட்டுச் செய்திகள்

இத்திருக்கோயிலில் தமிழிலும் கிரந்தத்திலும் உள்ள 95 கல்வெட்டுகளையும் அரசினர் படி எடுத்துள்ளனர். இராசராசன் 1, இராசேந்திரன் 1, வீரராசேந்திரன் 2, குலோத்துங்க விக்கிரமசோழன் 1, குலசேகரபாண்டியன், கௌமார பாண்டியன், விக்ரமபாண்டியன், ஜடாவர்மன், சுந்தரபாண்டியன், பராக்கிரம பாண்டியன், ஸ்ரீவல்லபதேவன், விருப்பண்ண உடையார், கிருஷ்ணதேவராயர், துக்கோஜி முதலியவர்கள் காலத்திய கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள கல்வெட்டுக்கள் இங்குள்ளன. கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயிலுக்கு வழங்கிய பல்வேறு நிவந்தங்களைப் பற்றியே உள்ளன. அவைகளனைத்தையும் எழுதின் நூல் விரிவாகும். எனவே செய்திகளின் சுருக்கம் மட்டும் ஈண்டுத் தரப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளால் மேற்குறித்த பல அரசர்களின் பெயர்களோடு அரசியரின் பெயர்களும் தெரியவருகின்றன. இராசராச நம்பிராட்டியார், கூத்தன்வீர நாராயணியார், பராந்தகன் மாதேவியார், செம்பியன் மாதேவியார், திரைலோக்கியம் உடையார், வானவன் மாதேவியார், நக்கன் உலோகமாதேவியார், பஞ்சவன் மாதேவியார், வில்லன் மாதேவியார் ஆகிய அரசியரும் நிவந்தங்கள் அளித்து உள்ளனர்.



திருமண மண்டபம்

மேலும் இக்கல்வெட்டுகளால் அறியும் செய்தி களாவன:

தேவர்கள் நாயகப் பெருமான் (உற்சவர்) இடபவா கன தேவர் நம்பிராட்டியார், பிச்சதேவர், ஆடவல்லார், அர்த்தநாரிதேவர் ஆகியோரின் திருவுருவங்கள் செய்து வைக்கப்பெற்றன.

கோசாலை (பசுமடம்) ஆதுலர்சாலை (ஏழைகள் உணவு விடுதி) மடம், நந்தவனம் ஆகியவை கோயிலைச் சார்ந்து இருந்தன.

வளத்து வாழவிட்டான் சந்தி, குலசேகரத்தொண்ட-மான் சந்தி, கலியுகராமன் சந்தி, சூடையவளைந்தான் சந்தி, நாகரசன்சந்தி, மானங்காத்தான் சந்தி ஆகியன நடைபெறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன.

மாத ஆயில்யவிழா, ஐப்பசி சதயவிழா, மார்கழித் திருவிழா ஆகியன நடைபெற்றன. விழாக்களில் எழுந் தருளும் மூர்த்திகளுக்குத் திருமுழுக்கு, பெருந்திருவமுது முதலியன நடைபெற்றன.

விக்ரமசோழன், திருவீதியில் மடம் கட்டினான்; கோயிலுக்கு வந்து இறைவனை வழிபட்டு "விக்ரமசோழன் மண்டபத்தில்" அமர்ந்திருந்தான். சுவேதாரண்யர் சந்நிதியில் உள்ளது விக்ரமசோழன் மண்டபம்.

இடபவாகனதேவர், நாயன்மார் முதலிய மூர்த்தி களைச் சங்கமத்துறைக்கு எழுந்தருளச் செய்து திருமஞ்சனமாட்டினர்.

விழாவிற்குவரும் அபூர்விகட்கு உணவளிக்கப் பட்டது. வேதம் ஓதுபவர்களுக்கு நிலதானம் செய்யப் பட்டது. சிவத்துரோகம் செய்தவர்களின் நிலங்கள்

பறிமுதல் செய்யப்பட்டன. திருப்பத்தூர் என்னுமிடத்தில் காவிரி உடைப்பெடுத்தது.

14. புதிய திட்டங்கள்

பல புதிய திட்டங்கள் திருக்கோயிலின் வளர்ச்சிக் காகத் தொடங்கப்பெற்றுள்ளன.

1. திருத்தேர்த் திருப்பணி

இத் திருக்கோயிலின் அழகான திருத்தேர்கள் பல ஆண்டுகளாக ஓடாமல் பழுதுபட்டுள்ளன. அவைகளைப் பழுதுபார்க்க ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

2. நித்ய பூசைக் கட்டளை

ரூபாய் 2000-00 இக்கோயிலுக்கு ஒருவர் செலுத்தின் அதனை வங்கியில் நிரந்தர வைப்பாக வைத்து அதிலி ருந்து வரும் வட்டியைக்கொண்டு ஒரு நாளைக்கு அவ்வன்பரின் பெயரில் அனைத்து சுவாமிகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்யப்படும்.

3. அகோராபிஷேகம்

இவ்வூரிலுள்ள அருள்மிகு அகோரமூர்த்திக்கு ஞாயிறு தோறும் இரவில் நடைபெறும் அகோராபிஷேகம் மிகவும் பிரசித்தமானது. இந்த அபிஷேகம் செய்கின்றவர்கள் வேண்டுவன அனைத்தும் கிடைக்கப்பெற்று மகிழ்வர் என்பது இன்றளவும் நடைமுறையில் உள்ளது. நேரில் வர இயலாதவர்கள் ரூ 500/—செலுத்தினால்அவர்பெயரில் அபிஷேகம் செய்து பிரசாதம் அனுப்பிவைக்கப்பெறும்.

4. அர்ச்சனை சீட்டுக்களின் விலை

அர்ச்சனை சீட்டுக்களின் விலை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

1. அஷ்டோத்திரம்	ரூ. 1—00	4.	அபிஷேகம்	ரூ. 5—00
2. சகஸ்ரநாமம்	ரூ. 3—00	5.	கவசம்	ரூ. 10—00
3. திரிசதை	ரூ. 1—50			

15. தலப்பாடல்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

1. பண் — சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கண்காட்டும் நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங்
[கொடியானே. 1

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந்
தீவினையே. 2

மண்ணொடுநீர் அனல்காலோ டாகாயம் மதியிரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம்
பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா
விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்

பண்மொழியா ளவன் நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணை மேல் வீற்றிருக்கும்
[வெண்காடே. 6

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானும் அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம்நன் குடையானும் முக்கணுடை யிறையவனே 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம் நெரித்நான் றருள்செய்தான்
உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும்
வெண்காடே. 8

கள்ளார்செங் கமலத்தான் கடற்கிடந்தான் எனஇவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும்
[உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண்
காட்டானென்
றுள்ளாடி யுருகாதார் உணர்வுடைமை யுணரோமே.. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி
[பொருளென்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே. 10

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான
[சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை
[வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப்
புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

2. பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. 1

நாதன் நம்மை ஆள்வா னென்று நவின்றேந்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல்
ஏதந் தீர இருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே. 2

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் தனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப உவகை தருவான் ஊர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே. 3

நரையார் வந்து நாளுங் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா உள்கு வார்கள் உள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான் மேவும் ஊர்போலும்
விரையார் கமலத் தன்னம் மருவும் வெண்காடே 4

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும் பெம்மானென்
றுள்ளத் துள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளுந் தலைவன் ஊர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும் வெண்காடே 5

ஒளிகொள் மேனி யுடையாய் உம்ப ராளீயென்
றளிய ராகி யழுதுற் றூறும் அடியார்கட்
கெளி யான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
வெளிய உருவத் தானை வணங்கும் வெண்காடே. 6

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த மாணிக்காய்
ஆள்வித் தமரர் உலகம் அளிப்பான் ஊர்போலும்
வேள்விப் புகையால் வானம் இருள்கூர் வெண்காடே. 7

வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று முப்போதும்
இளையா தேத்த இருந்தான் எந்தை ஊர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த வெண்காடே. 8

கரியா னோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான் என்பார்கட்
குரியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே. 9

பாடும் அடியார் பலருங் கூடிப் பரிந்தேத்த
ஆடும் அரவம் அசைத்த பெருமான் அறிவின்றி
மூடம் உடைய சமண்சாக் கியர்கள் உணராதே
வேடம் உடைய பெருமான் பதியாம் வெண்காடே. 10

விடையார் கொடியான் மேவி உறையும் வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங் காழியான்
நடையார் இன்சொல் ஞானசம் பந்தன் தமிழ்வல்லார்க்
கடையா வினைகள் அமர லோகம் ஆள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

3. பண் — காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மந்திரம் மறையவை வானவ ரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்இறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமும் முதலுடை அடிக ளல்லரே. 1

படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவணம் உகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுர ரல்லரே. 2

பாலொடு நெய்தயிர் பலவு மாடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தஎம் அடிக ளல்லரே. 3

ஞாழலுஞ் செருந்தியும் நறுமலர்ப் புன்னையுந்
தாழைவெண் குருகயல் தயங்கு கானலில்
வேழம துரித்தவெண் காடு மேவிய
யாழின திசையுடை யிறைவ ரல்லரே. 4

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலஇடர் தீர்க்கும் எம்இறை
வேதங்கள் முதல்வர்வெண் காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரம ரல்லரே. 5

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்மிறை
விண்ணமர் பொழில்கொள்வெண் காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்ல லில்லையே 6

நயந்தவர்க் கருள்பல நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரு மழுவுடைப் பரம ரல்லரே. 7

மலையுடன் எடுத்தவல் லரக்கன் நீள்முடி
தலையுடன் நெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிக ளல்லரே. 8

ஏடவிழ் நறுமலர் அயனும் மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேர கிற்கிலார்
வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை அமர்ந்தஎம் அடிக ளல்லரே. 9

போதியர் பிண்டியர் பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை அடிதொழ அல்ல லில்லையே. 10

நல்லவர் புகலியுள் ஞானசம் பந்தன்
செல்வன்எம் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை அறுத லாணையே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

1. திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணில் நின்ற மணிஒக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்திரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே. 1

கொள்ளி வெந்தழல் வீசிநின் றாடுவார்
ஒள்ளி யகணஞ் சூழுமை பங்கனார்
வெள்ளி யன்கரி யன்பசு வேறிய
தெள்ளி யன்திரு வெண்கா டடைநெஞ்சே. 2

ஊனோக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானோக் கும்வழி யாவது நினைமினோ
தானோக் குந்தன் னடியவர் நாவினில்
தேனோக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே. 3

பருவெண் கோட்டுப்பைங் கண்மத வேழத்தின்
உருவங் காட்டிநின் றானுமை யஞ்சவே
பெருவெண் காட்டிறை வன்னுறை யும்மிடம்
திருவெண் காடடைந் துய்ம்மட நெஞ்சமே. 4

பற்ற வன்கங்கை பாம்பு மதியுடன்
உற்ற வன்சடை யானுயர் ஞானங்கள்
கற்ற வன்கய வர்புர மோரம்பால்
செற்ற வன்திரு வெண்கா டடைநெஞ்சே. 5

கூடி னாலுமை யாளொரு பாகமாய்
வேட னாய்விச யற்கருள் செய்தவன்
சேட னார்சிவ னார்சிந்தை மேயவெண்
காட னாரடி யேஅடை நெஞ்சமே. 6

தரித்த வன்கங்கை பாம்பு மதியுடன்
புரித்த புன்சடை யான்கய வர்புரம்
எரித்த வன்மறை நான்கினோ டாறங்கம்
விரித்த வன்உறை வெண்கா டடைநெஞ்சே. 7

பட்டம் இண்டை அவைகொடு பத்தர்கள்
சிட்ட னாதியென் றுசிந்தை செய்யவே
நட்ட மூர்த்திஞா னச்சுட ராய்நின்ற
அட்ட மூர்த்திதன் வெண்கா டடைநெஞ்சே. 8

ஏன வேடத்தி னானும் பிரமனுந்
தான வேடமுன் தாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயுங்
கான வேடன்றன் வெண்கா டடைநெஞ்சே. 9

பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. 10

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
இராவ ணம்முடைய யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே. 11

திருச்சிற்றம்பலம்

2. திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறி அரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 1

பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
ஒத்துலக மெல்லா மொடுங் கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 2

நென்னலைஓர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்குகின்றார்
நுந்நிலைமை யாதோ நும் மூர்தான் ஏதோ
என்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 3

ஆகத் துமையடக்கி யாறு சூடி
ஐவா யரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவியேனை
மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 4

கொள்ளைக் குழைக்காதிற் குண்டை பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
உழிதருவர் நான்தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிவிழிப்பார் காணாக் கண்ணாற்
கண்ணுளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடை முடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 5

தொட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் றாராற்

கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 6

பெண்பா லொருபாகம் பேணா வாழ்க்கைக்
கோள்நாகம் பூண்பனவும் நாணாஞ் சொல்லார்
உண்பார் உறங்குவார் ஒவ்வா நங்காய்
உண்பதுவும் நஞ்சன்றே லோபி யுண்ணார்
பண்பால் அவிர்சடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றார்
விண்பால் மதிசூடி வேத மோதி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 7

மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
வானவரும் மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளால்துதித்துத் தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்
கருதுங்கொல் எம்பெருமான் செய்குற் றேவல்
என்பார்க்கு வேண்டும் வரங்கொ டுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 8

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றான் தன்னை
உள்ளானை யொன்றலா உருவி னானை
உலகுக் கொருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கொன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொ டுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 9

மாக்குன் றெடுத்தோன்தன் மைந்த னாகி
மாவேழம் வில்லா மதித்தான் தன்னை
நோக்குந் துணைத்தேவ ரெல்லாம் நிற்க
நொடிவரையில் நோவ விழித்தான் தன்னைக்
காக்குங் கடலிலங்கைக் கோமான் தன்னைக்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி
வீக்கந் தவிர்த்த விரலார் போலும்
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 10

திருச்சிற்றம்பலம்

பொது—க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடி விசய மங்கை வியலூர்
ஆழி அகத்தியன் பள்ளி யண்ணா
மலையாலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே.

திருச்சிற்றம்பலம்.

பொது— அடைவு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

மலையார்தம் மகளொடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங் காடு
தலையாலங் காடுதடங் கடல்சூ ழ்ந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர்பாடும் பழையனூ ராலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறா மன்றே.

திருச்சிற்றம்பலம்

பொது-பலவகைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

தண்காட்டச் சந்தனமும் தவள நீறுந்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலை சூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண
எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி யிரவாடும் இறைவர் மேய
வெண்காடே வெண்காடே என்பீராகில்
வீடாத வல்வினைநோய் வீட்டலாமே.

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

புகழொளியைப் புரமெரித்த புனிதன் தன்னைப்
பொன்பொதிந்த மேனியனைப் புராணன் தன்னை
விழவொலியும் விண்ணொலியு மானான் தன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் தன்னைக்
கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக்
கடைதோறும் இடுபிச்சைக் கென்று செல்லுந்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னை
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண்—இந்தளம்

திருசிற்றம்பலம்.

படங்கொள்நாகஞ் சென்னிசேர்த்திப்
பாய்புலித்தோ லரையில்வீக்கி
அடங்கலாரூர் எரியச்சீறி
அன்றுமூவர்க் கருள்புரிந்தீர்

மடங்கலானைச் செற்றுகந்தீர்
　　மனைகள்தோறும் தலைகையேந்தி
விடங்கராகித் திரிவதென்னே
　　வேலைசூழ்வெண் காடனீரே. 1

இழித்துகந்தீர் முன்னைவேடம்
　　இமையவர்க்கும் உரைகள்பேணா
தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட
　　உயர்தவத்தை அமரர்வேண்ட
அழிக்கவந்த காமவேளை
　　அவனுடைய தாதைகாண
விழித்துகந்த வெற்றியென்னே
　　வேலைசூழ்வெண் காடனீரே. 2

படைகளேந்திப் பாரிடமும்
　　பாதம்போற்ற மாதுநீரும்
உடையோர்கோவ ணத்தராகி
　　உண்மைசொல்லீர் உண்மையன்றே
சடைகள்தாழக் கரணமிட்டுத்
　　தன்மைபேசி யில்பலிக்கு
விடையதேறித் திரிவிதென்னே
　　வேலைசூழ்வெண் காடனீரே. 3

பண்ணுளீராய்ப் பாட்டுமானீர்
　　பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்திலும்மைக்
　　கருதுவார்கள் காணும்வண்ணம்
மண்ணுளீராய் மதியம்வைத்தீர்
　　வானநாடர் மருவியேத்த
விண்ணுளீராய் நிற்பதென்னே
　　வேலைசூழ்வெண் காடனீரே. 4

குடமெடுத்து நீரும்பூவுங்
　　கொண்டுதொண்டர் ஏவல்செய்ய
நடமெடுத்தொன் றாடிப்பாடி
　　நல்குவீர்நீர் புல்குவண்ணம்

வடமெடுத்த கொங்கைமாதோர்
பாகமாக வார்கடல்வாய்
விடமிடற்றில் வைத்ததென்னே
வேலைசூழ்வெண் காடனீரே.

மாறுபட்ட வனத்தகத்தின்
மருவவந்த வன்களிற்றைப்
பீறிட்ட மாகப்போர்த்தீர்
பெய்பலிக்கென் றில்லந்தோறும்
கூறுபட்ட கொடிநீருங்
குலாவியேற்ற அடரவேறி
வேறுபட்டுத் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 6

காதலாலே கருதுந்தொண்டர்
காரணத்த ராகிநின்றே
பூதம்பாடப் புரிந்துநட்டம்
புவனியேத்த ஆடவல்லீர்
நீதியாக ஏழிலோசை
நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 7

குரவுகொன்றை மதியமத்தங்
கொங்கைமாதர் கங்கைநாகம்
விரவுகின்ற சடையுடையீர்
விருத்தரானீர் கருத்திலும்மைப்
பரவுமென்மேற் பழிகள் போக்கீர்
பாகமாய மங்கையஞ்சி
வெருவவேழஞ் செற்றதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 8

மாடங்காட்டுங் கச்சியுள்ளீர்
நிச்சயத்தால் நினைப்புளார் பாற்
பாடுங்காட்டி லாடலுள்ளீர்
பரவும்வண்ணம் எங்ஙனேதான்

நாடுங்காட்டில் அயனுமாலும்
நணுகாவண்ணம் அனலுமாய
வேடங்காட்டித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே.
விரித்தவேதம் ஓதவல்லார்
வேலைசூழ்வெண் காடுமேய
விருத்தனாய வேதன்றன்னை
விரிபொழிற்றிரு நாவலூரன்
அருத்தியாலா ரூரன்றொண்டன்
அடியன்கேட்ட மாலைபத்துந்
தெரித்தவண்ண மொழியவல்லார்
செம்மையாளர் வானுளாரே.
திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம்—கீர்த்தித்திருஅகவல்

திருச்சிற்றம்பலம்.

விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்.

திருக்கோவையார்

வேலன் புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்த வியக்கழல் வைத்தெழில் தில்லை நின்ற
மேலன் புகுந்தென்க ணின்றா னிருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப பரிசினில் நிற்பித்த பண்பினுக்கே
திருச்சிற்றம்பலம்

கபிலதேவ நாயனார்

சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்.

இயலிசை நாடக மாயெழு வேலைக ளாய்வழுவாப்
புயலியல் விண்ணொடு மண்முழு தாய்ப்பொழு தாகிநின்ற

மயிலியன் மாமறைக் காடர்வெண் காடர்வெண் தில்லைமல்கு
கயலியல் கண்ணிபங் காரன்பர் சித்தத் தடங்குவரே.

திருச்சிற்றம்பலம்.

சிவபெருமான்—திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாந் தீர்தும் எழில்நெஞ்சே—இன்றியாங்
காட்டாநஞ் சேற்றான் காமருவெண் காட்டான்
காட்டான் அஞ் சேற்றான் கலந்து.

திருச்சிற்றம்பலம்.

பரணதேவ நாயனார்

சிவபெருமான் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

புகலூர் உடையாய் பொறியரவம் பூணி
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே—புகலூராய்
வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்றாய்
வெண்காடா என்பேனோ நான்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்தார்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்.

கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதஅப் பாமதி யொன்று மில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு ளாகிவெண் காடனென்னும்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

நினைவார்க் கருளும் பிரான்திருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புறம்பயம் பூவணம்நீர்
புனைவார் பொழில்திரு வெண்காடு பாச்சில்
அதிகைஎன்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி ஏகம்பம் நண்ணுமினே.

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார் சுவாமிகள்

திருத்தொண்டர் புராணம்— சம்பந்தர் புராணம்

பொன்னிதழ்க் கொன்றை வன்னி
புனலிள மதியம் நீடு
சென்னியர் திருவெண் காட்டுத்
திருத்தொண்டர் எதிரே சென்றங்(கு)
இன்னதன் மையர்க ளானார்
எனவொணா மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளும்
மன்னரைக் கொண்டு புக்கார்.

முத்தமிழ் விரகர் தாமும்
முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடுஞ்
சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தராம் அடியோர் சூழப்
பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி
நிலமுறத் தொழுது வீழ்ந்தா.

மெய்ப்பொரு ளாயி னாரை
வெண்காடு மேவினாரைச்
செப்பரும் பதிக மாலை
கண்காட்டு நுதல்முன் சேர்த்தி

முப்புரஞ் செற்றார் பாதஞ்
சேருமுக் குளமும் பாடி
ஒப்பரு ஞான முண்டார்
உளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார்.

ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம்

தேவர்பெரு மான்தனைத் திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலரடைந்தார் நனிபள்ளித் திருநகரில்.

சிதம்பர முனிவர்

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

தண்தரளம் எறிதிரைப் பாலாழி சததளத்
தாமரைச் சிங்காதனந்
தருகற்ப கக்காடு சங்கநிதி பத்மநிதி
தந்திடுஞ் சிந்தாமணி
எண்திசா முகமுடன் சந்த்ரசூ ரியர்பதம்
இந்திரபு ரோகிதர் பதம்
ஈராறு ராசிபதம் மனுமன்னர் தம்பதம்
எண்ணிலா தோர்பதங்கள்
தொண்டுசெயு மன்பருக் கென்றே படைத்தனன்
தோன்றாத்து ணையாமிவன்
தோன்றுந் துணையெனன் முன்னின்றழைத்தனன்
துண்ணென்ன ஓடிவந்தால்
அண்டங்கொ டுத்தருள்வ னெங்கள்கும ரேசனுடன்
அம்புலீ யாடவாவே
அவனிபுக ழுஞ்சுவேத வனமுறையும் வேலனுடன்
அம்புலீ யாடவாவே.

சோமசுந்தர தேசிகர்

சிவாலய மான்மியக்கோவை

தொய்யின்வெம் முலையார் மையலிற் சிக்கிச்
சூழ்நர கினுக்கிலக் காகிப்
பொய்யனேன் வருந்தல் தக்கதோ அருள்வாய்

பூம்பொழில் சூழும்வெண் காட்டு
மெய்யனே சுவேதா ரண்ணியேச் சுரனே
மிளிர்கவின் பெரியநா யகிசேர்
செய்யனே வெள்ளை யானைபூ சித்த
செல்வமே கருணைவா ரிதியே.

பட்டினத்துப் பிள்ளையார்

திருவெண்காட்டுத் திருவிசைப்பா

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே உரைத்துங்
கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங்
கழிந்தன கடவநா ளெல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற் றிருக்கும்
விழாவறா வீதிவெண் காடா
அண்டரே காண அம்பலத் தாடும்
ஐயனே உய்யுமா றருளே.

கோடிய மனத்தால் வாக்கினால் செயலால்
கொடியஐம் புலன்களால் அடியேன்
தேடிய பாவ நரகமுங் கொள்ளா
செய்தவம் புரியினுந் தீரா
வீடிய பிரமர் சிரமெலாங் கவர்ந்த
விழாவறா வீதிவெண் காடா
ஆடிய பாதா அம்பலத் தாடும்
ஐயனே உய்யுமா றருளே.

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

கந்தபுராணம் —திருவிளையாட்டுப்படலம்

சூழுற்றவெல்லையிமையோர்க்கிறைதொல்லைநாளிற்
காழுற்றதந்தமறவேகி வெண்காட்டிலீசன்
கேழுற்றதாளர்ச்ச னைசெய்து கிடைத்துவைகும்
வேழத்தையுன்ன வதுவந்தது மேருவின்பால்.

பரஞ்சோதி முனிவர்

திருவிளையாடற்புராணம்—அர்ச்சனைப்படலம்

கோடுநான் குடைய வேழந் தானவன் குறைத்த
கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது* மாலை சாத்துந்
தாடகை மானங் காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலய னன்பி னிமிர்ந்தவெம் பிரானூ ரீதால்.

தனிப்பாடல்

ஊரெலாஞ் சிவலோகம் மணலெலாஞ் சிவலிங்கம்
உயர்மரமெலாந் தெய்வதம்
ஊர்வன பறப்பன நடப்பன கிடப்பன
வும்பரினமாங் குளம்பின்
நீரெலாஞ் சிவதீர்த்தம் நிதியெலாஞ் சங்கநிதி
நெல்லெலாம் அன்னமயமாம்
நினைவெலாஞ் சிவசிந்தை கனவெலாஞ் சிவபோகம்
நித்திரையெ லாஞ்சமாதி
காரெலாம் பொழின்மருவு காவிரியி னிருபால்
கலந்துவரு மாலையெனவே
கடலொலியி னொடுசுருதி பகரொலி கலத்தலால்
கயிலாயமெனக் கொண்ட
பேரெலாஞ் சிவகணம் எனப்பொலியும் ஆதலால்
பெரியவெண் காடரென்னப்
பிறைகொள்வார் சடையண்ண லருகின்வா
ழுறைமன்னு
பெரியநாயகி யம்மையே.

சைவ-எல்லப்ப நாவலர் திருவெண்காட்டுப் புராணம்

சுவேதாரணியேசுவரர்

சொற்கண்டு பசுங்கிளியுங் கருங்குயிலுங் கடலமுதுஞ்
சுவையறாத
கற்கண்டுந் திறையளக்கு மலர்த்திருவின் பெருமானுங்
கமலத்தானு

---

* பதி—திருவெண்காடு

மற்கண்ட விடம்பிறந்த தலைநாளி லிறவாம லருள்செய்
தானைப்
பொற்கண்ட லனையவனைச் சுவேதவனப்பெருமானைப்
போற்றுவாமே.

பெரியநாயகி அம்மை

அடையலர்தம் புரமூன்று மடர்த்தபிரான்
புவனமுய்ய வாடா நிற்பான்
பெடைதழுவுஞ் சுவேதவனம் புடைசூழுஞ்
சுவேதவனப் பெருமா னார்தந்
தொடை திகழு மணிப்புயமுந் திருமார்புங்
குழைத்தகொங்கைத் துணையினாளை
யிடைசிறிய நாயகியை யருட்பெரிய
நாயகியை யிறைஞ்சு வாமே.

நடராசர்

துடிவரத மெரிகனலு முயலகனை
மிதிபதமுந் தூக்குந் தாளும்
படிமுழுதும் படைத்தளித்துச் சங்கரித்து
மறைத்தருளும் பான்மைத் தாக
நடநவிற்றி நவ்விவிழிச் சிவகாம
சுந்தரியை நாடி நின்ற
படவரவுங் கொடுவரியும் பழிச்சவமர்
பரம்பரனைப் பரவி வாழ்வாம்.

தலவிநாயகர்

கரியநா ரணனார்க்குங் கரியநா ரணரளித்த கமலத்தார்க்கு
மரியநா யகரைவலம் புரிந்துசெழுங் கனிவாங்கி யருந்தி
னானைத்
தெரியுநான் மறைமுனிவர் மகம்புரிய முழக்கமறாத்
திருவெண்காட்டிற்
பெரியநா யகியளித்த பெரியவா ரணத்தையன்பாற் பேசு
வாமே.

முக்குளப்பெருமை

முக்குளத்திற் படிந்தவர்கள் மூவகையா
மேடணைகள் மூன்றுந் தீர்வர்
முக்குணமுங் கழன்றிடுவர் அதற்கடியா
கியபாச மூன்றுந் தீர்வர்
முக்கடமா உரிபுனைவர் முத்தலைமேல்
பிடிப்பரரா மூன்னு லாவர்
முக்கணுடை யவர்சூழ முத்தொழிலுந்
தந்தொழிலா முடிப்பர் தாமே.

அகிலபுவ னங்களெல்லா மொருகோ லோச்சி
ஆளுதற்கு நினைக்கிலந்த அரசுண் டாகும்
பகைமைதவிர்ந் திடநினைத்தாற் பகைமை தீரும்
பாலகரை வேண்டிலந்தப் படியாம் பின்னைத்
தொகைபெறஓர் விடையுண்டாம் இருதாள் உண்டாம்
சுடர்நயன மூன்றுண்டாந் தோள்நான் குண்டாம்
முகவனசம் ஐந்துண்டாம் முடியா றுண்டாம்
முக்குளத்தி லொருபோது மூழ்கு வார்க்கே.

பத்திசெய்யு மடியாரைக் கண்டால் நம்மைப்
பணிவதுபோற் பணிந்துருகும் பரிவுண் டாகும்
சித்தசுத்தி மிகவுண்டாம் நமையெப் போதும்
சிந்தித்துச் சிந்திக்கும் செல்வ முண்டாம்
சுத்தவித்தை முதல்நாத மளவா நீங்கிச்
சுவானுபூ திகமடைந்து தொலையாச் சீவன்
முத்தரெனு நிலையுண்டாம் திருவெண் காட்டின்
முக்குளத்தி லொருபோது மூழ்கு வார்க்கே.

களித்திடு முக்குளத்தை நெஞ்சால் நினைத்தபேர்
கங்கையிலே மூழ்கிவந்தோர் கதியைச் சேர்வர்
தெளித்தவர்கள் மகாபதத்தை யடைவர் இந்தச்
செழுங்கரைமே லணுவளவு செம்பொன்றானம்
அளித்தவர்கள் நமையடைவர் அளித்து மன்னா
ஆடியபே ரானந்த ஆழி யூடே

குளித்திடுவர் அவையிலொரு துளிநீ ருள்ளே
குடித்திடுவார் தாய்முலைப்பால் குடித்திடாரே,
முக்குளத்தைப் புகழ்ந்தவர்க்குத் தானபலன்
யாகபலன் முழுதுண்டாகும்
முக்குளத்தைத் தொழுதவர்க்கு முப்பொழுதுஞ்
சிவபூசை முடித்த பேறாம்
முக்குளத்தை வலம்புரிந்தால் மூவுலகை
வலம்புரிந்த முழுப்பே றுண்டாம்
முக்குளத்தின் மூழ்கினபேர்க் கொருநயனம்
நடுக்குளத்தின் முளைக்குந் தானே.

சிவானந்தர்

ஸ்ரீ அகோரரந்தாதி

பூவார் பொழிற்றிரு வெண்காட்டில் வாழும் புனிதன் உம்பர்
ஆவார் பெருந்துன் பொழித்திடத்தோன்றும் அகோரனுக் கென்
நாவார் சொன்மாமலர் கொண்டொர் அந்தாதித்தொடை நவிற்று
மாவார் பெரும்வாரணப் பிள்ளையார் தம் மலர்ப்பதமே.

சொல்லு நினைவுங் கடந்தொளிர் சோதிச் சுகவடிவே
யல்லும் பகலுநின் னம்புயப் பாதத்தி லன்புவைத்தே
புல்லும் வணஞ்செய லுன்கட லோகடற் பொஙகிமிழை
வெல்லும் மறையொலி வெண்காட்டகோரநல் வித்தகனே.

அன்பே சிவமின்றி வேறில்லை யென்ன வருமறைகண்
முன்பே மொழிந்தன வென்கட வென்முடை மூரலர்தம்
பின்பே யலைந்தெரி மேலிழு தென்னப் பெரிதுறைந்தே
னின்பே யகோர விரங்கா யினியுனை யெண்ணிடவே.

மாணிக்க வாசக மாமறை யோனுமெவ் வானவரும்
பேணிக்கை கூப்பும் பெருநாவலூரனும் பேரொளியைத்

தோணிக்கட் சுட்டுமென் றோன்றலும் வாக்கின்
றுரையுஞ்சொலும்
பாணிக் கழலி லகோரா வணியென் பருங்கவியே.

பண்ணார் தவமொன்று மேயைந் தெழுத்தைநற்
பத்தியோடு
மெண்ணா ரிகமும் பரமுந் தருமுன் னெழில்வெள்வன
நண்ணா ரகோரநின் னல்லடி யார்க்கன நல்கிமிச்சி
லுண்ணா ருடற்பொதி காப்பா ரவர்க்கென்
னுரைப்பதுவே.

நாயக் னேயண்டம் யாவைக்கு நல்லிசை நான்குமறைக்
காயக னேகரு ணாகர னேவிண் கணிக்கவெழு
வேயக னேபொழில் சூழ்திரு வெள்வன வித்தகனே
தாயக னேயென் னகோரநி னம்பொற் சரண்சரணே.

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம்.